பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir



வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்

சன்சிகா நகைமாடம்

இல.114, பஸார் வீதி, வவுனியா.

தொலைபேசி: 024 222 4028

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஐப்பசி 03 | வெள்ளிக்கிழமை 20.10.2017 | கதிர் 348

# அரசியல் கைதிகள் விடயம்: அரசின் பதில் அடுத்த வாரம்!



## யாழ். பல்கலை மாணவரிடம் ஜனாதிபதி உறுதி தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 20

அநுராதபுரத்தில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகள் உட்பட பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அடுத்த ஒரு வார காலத்துக்குள் உச்சப்பச்சமான - நியாயமான - நடவடிக்கை ஒன் றைத் தமது அரசு எடுத்து அறிவிக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தம்மைச் சந்தித்த யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளிடம் உறுதி அளித்தார் என அறிய வந்தது.

பக்கம் 18

## சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினரிடமும் மைத்திரி தகவல்



கொழும்பு, ஒக்ரோபர் 20

அநுராதபுரம் சிறையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்களை நேற்று தமது ரெலோ பிரதிநிதிகளுடன் கூட்டிச் சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அரச உயர் மட்டத்தினரைச் சந்திக்க வைத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம். இக்கைதிகள் விடயத்தில் அடுத்த வாரத்தில் சாதகமான சில பதில்கள் ஜனாதிபதியிடமிருந்து அல்லது அரசிடமிருந்து தங்களுக்குக் கிடைக்கும் என்று தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என சிவாஜிலிங்கம் பின்னர் தெரிவித்தார்.

பக்கம் 18

### கைதிகள் விடயம் தொடர்பாக

## நாடாளுமன்றில் நடக்கவிருந்த கூட்டமும் அடுத்த வாரத்துக்கு!

கொழும்பு, ஒக்.10

அநுராதபுரத்தில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெறவிருந்த உயர்மட்டக் கூட்டமும் அடுத்தவார முற்பகுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்துடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட

பக்கம் 18



கொழும்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற தேசிய தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வுகளுக்கு இடையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர், சபாநாயகர், அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோர் அமர்ந்திருக்கும் காட்சி...

### அரசமைப்பு மாற்றத்தை

## பௌத்த பீடங்கள் எதிர்க்கின்றன என்று வெளியான செய்தி தவறு என்கிறார் ரணில்

### பீடாதிபதிகள் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றவே இல்லையாம்

கொழும்பு, ஒக்.20

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான விடயத்தில் ஊடகங்கள் பொய்களைக் கூறி மக்களைத் தவறாக வழி நடத்த முயல்கின்றன எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரடியாக ஊடகங்களைக் குற்றம் சுமத்தினார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிகள் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை எதிர்க்கிறார்கள் என்று தெரிவிக்கும் தலைப்புச் செய்தியை மல்வத்தை மகாநாயக்கர் வண.திப்பட்டுவாவெ சித்தார்த்த சுமங்கல தேரரின் படத்துடன் பல பத்திரிகை பிரசுரித்திருக்கின்றன என்று தெரிவித்த

பக்கம் 18



### தாஜுதீன் கொலை விவகாரம்:

## சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிமன்றில் நேற்றுப் பிணை

நேற்று நீதிமன்றில் சரணடைந்த முன்னாள் கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் ஆனந்த சமரசேகரவுக்கு பிணை வழங்கப் பட்டுள்ளது.

உயிரிழந்த றகர் வீரர் வசீம் தாஜுதீனின் உடற்பாகங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்

பக்கம் 18

## கோட்டா நாடு திரும்பினார்; கைதுப் படலம் நடக்கவில்லை

கொழும்பு, ஒக்.20

அமெரிக்கா சென்றிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபய ராஜபக்ஷ நாடு திரும்பும் போது கைதுசெய்யப்படுவார் என்று பேச்சுகள் அடிப்பட்ட நிலையில் அவர் நேற்றுக் காலை நாடு திரும்பினார். ஆனால் காவல் துறை அதிகாரிகள் எவரின் தலையீடு, தடையின்றி விமானநிலையத்திலிருந்து

பக்கம் 18

# வடக்கில் ஆசிரிய நியமன விடயத்தில் மத்திய அரசால் பெரும் தவறிழைப்பு

## — சாடுகின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் —

யாழ்ப்பாணம்,ஒக்.20

இவ்வருடம் ஆசிரிய நியமனம் பெறுகின்ற - கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற - வடமாகாணத்தைச் சேர்ந்த 400இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களில் 207பேர் மட்டுமே வடக்கு மாகாணத்திற்கு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இதன் மூலம் வடக்கு மாகாண ஆசிரிய நியமனத்தில்மத்திய அரசுதவறிழைத்துவிட்டது.

இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மேற்படி பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணவர்களை இணைக்கும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும், ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் வெற்றிடங்களையும் கணக்கில் கொண்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி வடக்கு மாகாணத்தில் 500இற்கு மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் பயிற்சி முடித்த ஆசிரியர்களில் அரைவாசிப் பேருக்கே வடக்கு மாகாணத்திற்கு நியமனம் வழங்கியுள்ள மத்திய அரசு அதன் மூலம் தவறிழைத்தது மட்டுமன்றி வடக்கு மாகாணத்தின் கல்வியை இன்னும் பாதாளத்திற்குக் கொண்டுசெல்ல முயலுகின்றது.

இதில் யாவரும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம். பட்டதாரிகள் தவிர்ந்த எந்த ஆசிரியர் நியமனம் வழங்கும் அதிகாரமும் மாகாண சபைக்குக் கிடையாது என்பதுதான். ஆகையினால்தான் வடக்கு மாகாணத்தில் நீண்டகாலம் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றியோருக்கு மத்திய கல்வி அமைச்சின் அதிகாரிகள் நேர்முகத் தேர்வை நடத்தினர்.

அதன் அடிப்படையிலும் பலர் நிராகரிக்கப்பட்டு 200 இற்கு உட்பட்டவர்களுக்கே தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்க அனுமதிக்கப்பட்டது. அதுவும் தற்போது வடக்கு மாகாண சபையால் நிறுத்தப்பட்டுள்ளது.

**இதற்குஎன்னதான்தீர்வு?**

ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாண ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் வடக்கு கல்வி அமைச்சிடம் வழங்கப்படவேண்டும். அல்லது வடக்கு மாகாணகல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களை மதித்து தேவையானவற்றை வழங்க வேண்டும்.

இதைவிட மத்திய அரசு கல்வித்துறைக்கு போதிய நிதியை ஒதுக்கியுள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றார். வடக்கிலோ மாதாந்தம் வேதனம் வழங்குவதற்கு போதிய நிதிக்காகத் தாங்கள் திண்டாடுகின்றனர் என அதிகாரிகள் கூறுகின்றனர். இதில் எது மெய்? எது பொய்? புதிதாக நியமனம் வழங்கிய ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதை யாவரும் அறிவர்.

இவற்றுக்கெல்லாம் தீர்வாக வடக்கு மாகாண சபையின் துறைசார்ந்த உறுப்பினர்களோடு, வடக்கு மாகாண உயர் அதிகாரிகளும் சேர்ந்து சென்று ஜனாதிபதியைச் சந்தித்து, எடுத்துரைத்து, அந்த விடயங்களை ஊடகங்களுக்கு வழங்க வேண்டும்.

இதனை உடனடியாக வடக்கு மாகாண சபை கவனத்தில் எடுத்து துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இப்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(உ)

## வர்த்தகர்களிடம் பணம் பறிக்கும் இளைஞர் குழு!

வவுனியா, இலுப்பையடி பகுதியில் வர்த்தகர்களிடம் இளைஞர்குழுவொன்று பணம் பறித்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை வேளையில் மதுபோதையில் வரும் இளைஞர் குழுவொன்று அப்பகுதியில் உள்ள வர்த்தகர்களிடம் பணம் கேட்கின்றது எனவும் தர மறுக்கும் பட்சத்தில் குறித்த வர்த்தகர்களுடன் தகராறில் ஈடுபடுகின்ற எனவும் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை, அண்மையில் குறித்த குழுவினர் பணம் வழங்க மறுத்த வர்த்தகருடன் தகராறில் ஈடுபட்ட நிலையில் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸார் குறித்த பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் காரணமாக சில நாள்களாக பணம் பறிக்கும் செயற்பாட்டை நிறுத்தியிருந்த அந்த இளைஞர் குழு தற்போது மீண்டும் தமது கைவரிசையை காட்டத்தொடங்கியுள்ளது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் மக்கள் நடமாட்டம் குறையும் வேளையிலேயே தாம் கடைகளை மூட வேண்டியதுர்ப்பாக்கியநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## வவுனியா ஏ9 வீதியில் விழும் நிலையிலுள்ள பிரித்தானியர் காலத்து மரங்கள் அகற்றல்!

வவுனியா, ஒக். 20

வவுனியா, ஏ9 வீதியில் விழும் நிலையில் காணப்படும் பிரித்தானியர் கால மரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அகற்றப்படுகின்றன.

வவுனியா, ஏ9 வீதியில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நாட்டப்பட்ட வாகை மரங்கள் பல வீதி மருங்கில் காணப்படுகின்றன. இவை போக்குவரத்துச் செய்யும் பயணிகளின் நிழல் தரிப்பிடங்களாகவும், சில நடமாடும் வியாபாரிகளின் வியாபார இடங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில், அதில் உள்ள 16 வாகை மரங்களில் 9 மரங்கள் உயிர்ப்பிழந்து விழும் நிலையில் காணப்பட்டன. இவை மக்களுக்கு



பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் முறிந்து அல்லது பாறி விழலாம் என மக்கள் கருத்துத் தெரிவித்து வந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் அவை தற்போது அகற்றப்பட்டு வருகின்றது.

இதேவேளை, குறித்த பகுதியில் மீண்டும் புதிய மரங்களை நடுவதற்கும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (க-100)

# யாழ். மக்களுக்கு நோர்வே தொடர்ந்து உதவி வழங்கும்

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை நோர்வே அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கும் என நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் தோர்ப்ஜோர்ன் கௌசடாதர் உறுதியளித்துள்ளார் என யாழ்.மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகத்திற்கும் தோர்ப்ஜோர்ன் கௌசடாதருக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கன் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்ட அபிவிருத்



யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் நோர்வே தூதுவர் உறுதி!

திகள் மற்றும் மீள்குடியேற்றம் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

நோர்வே அரசாங்கத்தினால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேறிய மக்களுக்கான திட்டங்களைப்பார்வையிடநோர்வே தூதுவர் மற்றும் அதிகாரிகள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், அண்மைக் காலங்களில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரங்கள் உட்பட முக்கியத்துவம் வாய்ந்த வாழ்வாதாரத் திட்டங்கள் எவை என்பது பற்றியும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் மற்றும் வேலை வாய்ப்பற்றஇளைஞர்கள்தொடர்பிலும் ஆராய்ந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கினைத் தவிர்ந்த அண்மையில்மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேச மக்களுக்கும் வாழ்வாதாரங்களை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள்வழங்குவது தொடர்பில் சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன் எனவும் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இளைஞர்களுக்கானவேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு புதிய தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும். வெளிநாட்டில் உள்ள எமது புலம்பெயர் மக்கள் இங்குள்ளவர்களுக்கு உதவி புரிவது தொடர்பிலும்ஆராய்ந்துள்ளார்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள மக்கள் இலங்கையில் உள்ள மக்களுக்கு உதவி செய்வதற்குரிய சலுகைகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது எனச் சுட்டிக்காட்டியுள்ளேன்.

அனைத்துவிடயங்களையும் ஆராய்ந்ததுடன், மயிலிட்டி துறைமுகம் மற்றும் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதி மீனவ குடும்பங்களைசந்தித்து அவர்களின் தேவைகள் குறித்தும் நோர்வே தூதுக் குழுவினர் ஆராயவுள்ளனர் எனவும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைச் சமூகத்துக்கு பூட்டிய சிறையிலிருந்து மடல்

'யாழ். பல்கலைக் கழகச் சமூகத்துக்கு பூட்டிய சிறையிலிருந்து ஒரு மடல்' என்ற தலைப்பில் புதிய மகஸின் சிறைச்சாலையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் சார்பில் ஒரு கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர், பீடாதி பதிகள், துறைத் தலைவர்கள், அனைத்துப்பீட மாணவர் ஒன்றிய அலுவலர்கள், துறைகள் மாண வர் ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக ஊழியர் சங்கம் என அனைத்துத் தரப்பினருக்கும் இந்த மடல் அனுப்பப்பட்டுள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு:-

அடிமைச் சாசனத்திற்கு அத்திவாரமாக கொண்டு வரப்பட்ட அவ சரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் பெயரில் கைதுசெய்யப் பட்டு இலங்கையின் பல்வேறு சிறைக் கூடங்களிலும் நெடுங்காலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளாகிய நாம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகச் சமூகமான தங்களுக்கு அன்புரிமை யுடன் வேண்டுகோள் ஒன்றினை முன்வைக்கும் முக் கிய தருணம் ஏற்பட்டுள்ளது எனக் கருதுகின்றோம்.

அன்றுகளில் சமூக விடுதலைக் காக சிலுவை சுமந்த நாம், இன்று களில் சரீர விடுதலைக்காக போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. எம்மவர் சாதனை களை சாலையேற்றி கதிரையேறிய கதாபாத்திரங்கள் கண்மூடிச் செயற்படுகின்ற இவ்வேளை கல்விப் புலத்தைக் கொண்டு பல்கலைக்கழக சமூகம் கண் கூர வேண்டும் என்று கம்பிக் கூண்டுக் குள் இருந்து கருணைத் தூது அனுப்புகின்றோம்.

அன்றுமுதல் இன்றுவரை தமிழரின் வாழ்வுரி மைப் போராட்டங்களில் வரையறுத்துக் கூறமுடி யாத பெரும் வகிபாகத்தை நல்கிவரும் சமூக மனப் பாங்குள்ள பல்கலைச் சமூகத்தினதும் சிவில் சமூ கங்களினதும் காலமறிந்த செயற்பாடுகளே முள்ளி வாய்க்காலுக்குப் பின்னரான முழுத் தமிழரினதும் முதுகெலும்பாக இருந்து வருகிறது. இதனைக் கண்டே இலங்கை ஆட்சியாள ரும் எம் தமிழினத் தின் வாக்கு வேட்டையாடிகளும் ஏன் சர்வ தேசத்தி னரும் கூட சிலவற்றை யேனும் தமிழருக்குச் செய் யத் தலைப்படுகின்றனர்.

அரசியலுக்கு அப்பாலான அஹிம்சைக் குரல் களை அவ்வளவு இலகுவில் யாராலும் அடக்கி விடவோ அலட்சியப்படுத்தவோ முடியாது என்ற உண்மையின் அடிப்படையில், உங்கள் தூண்டுதல் களால் எங்கள் விடுதலை வாழ்வு துலங்கவேண்டும் என தடுப்புச் சிறைக்குள் இருந்து தாகம் கொள் கின்றோம். அதற்கு எம் தமிழ் உறவுகளின் கரங்கள் உங்களை வலுப்படுத்தும் என நம்புகின்றோம்.

8 முதல் 24 ஆண்டுகளாக இருள் வாழ்வில் மூழ்கிக் கிடக்கும் தமிழ் அரசியல் கைதிகளான எம் முள், 03 மரண தண்டனைக் கைதிகளும், 08 ஆயுள் தண்டனைக் கைதிகளும், 10 தொடக்கம் 200 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களும், அதற்கு மேலதிகமாக வழக்கு விசாரணைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் விளக்கமறியல் கைதிகளுடன் சேர்த்து சுமார் 130 பேர் இலங்கை யின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம்.

எமது நெடுங்காலச் சிறையிருப்பு எமது குடும்பத் தினதும் பிள்ளைகளினதும் அன்றாடத்தை அழிவு நிலைக்குத் தள்ளி ஆண்டு கள் பல கடந்துவிட்டன. சமூக, பொருளாதார, கலாசாரப் பிரச் சினைகள் அவர்களைச் சீரழித் துக்கொண்டிருக்கின்றன. உறவு களின் எல்லையற்ற பிரிவு மனங்களை உருக்குலையச் செய்கிறது. இத்தனையும் சமூக விடுதலைக்கு சாமரம் வீசியதால் ஸ்ரீலங்கா அரசு எமக்களித்த சிறப்புச் சலுகை என்பதை சற்றுச் சிந் தித்துப் பாருங் கள். சிரமேற்றுச் செயற்படுங்கள்!

தமிழரின் அரசியல் விடுதலைக் கான 'போராட் டத்துடன் தொடர்பு பட்டவர்கள்' என்ற காரணத்தைக் காட்டி சிறைவைக்கப்பட்டிருக்கும் நாம், 'போர்க் கைதிகள்' அல்லது 'அரசியல் கைதிகள்' என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆகை யினால், யுத்தம் ஓய்ந்து 08 வருடங்கள் கடந் துள்ள நிலையில், அரசாங்கம் நல்லிணக்க அடிப் படையில் அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்து அனைத்துத் தமிழ் அரசி யல் கைதிகளையும் ஏதே னும் ஒரு பொறிமுறையின் ஊடாக விடுதலை செய்ய வேண்டும் என் பதே எமது வேண்டுகோள்.

எமது இந்த நீதி நியாயமான கோரிக்கையைப் பலப்படுத்தி, பிறர்நலம் போற்றும் அருளறம் வாய்ந்த பல்கலைக்கழகத் துணை வேந்தர், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், அனைத் துப்பீட மாணவர் ஒன்றி யத்தினர் மற்றும் கல்விசாரா ஊழியர் சமூகத்தினர் என அனை வரும் ஓரணியில் நின்று ஒருமித்துக் குரல் உயர்த்தி எமது விடு தலையை வலுப்படுத்த வேண்டும் என விநயமுடன் வேண்டு கோள் விடுக்கின்றோம். – என்று உள்ளது.

# ஆவரங்கால் இளைஞனுக்கு கழுத்தில் கத்திக் குத்து!



ஆவரங்கால் சர் வோதயா வீதியில் நேற்றுக் காலை பத்து மணியளவில் இளைஞன் ஒரு வரை மர்ம நபர்கள் இருவர் கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

ஆவரங்கால் சர்வோதயா வீதியில், உள் வீதிக்கு வந்த இருவர் தாங்கள் கொண்டு வந்த கத்தியால் இந்த நபர் மீது சரமாரியாகக் குத்தியுள்ளனர். இதில், ஆழமான குத்துக் காயமொன்று கழுத்துப் பகுதி யில் ஏற்பட்டுள்ளது. குத்திய கத்தி, கழுத்துப் பகுதி யில் அரைவாசியுடன் முறிவடைந்துள்ளது.

வீதியில் துடிதுடித்துக் கொண்டிருந்த, அதே பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை ரஜீவன் (வயது 32) என்ற இந்த நபரை, அப்பகுதியில் சென்ற இளைஞர்கள் காப்பாற்றி, அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அச்சு வேலி பிரதேச வைத்திய சாலையில், ஆரம்ப கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அந்த நபர் மாற்றப் பட்டார்.

# வழிகாட்டல் குழு மீண்டும் ரணில் தலைமையில் கூடியது

அரசமைப்பு வழிகாட்டல் குழு நேற்று மீண்டும் நாடாளுமன்றத்தில் பிரதமர் தலைமையில் கூடி யது.

எதிர்வரும் 30, 31 மற்றும் முதலாம் திகதிகளில் இடைக்கால அறிக்கையில் உள்ள விட யங்கள் குறித்து மட்டும் நாடாளுமன்றத்தில் விவாதிப்பது என்றும் –

உபகுழுக்களின் அறிக்கைகள் பற்றிய விடயங் கள் குறித்து பிறிதொரு திகதியில் நாடாளுமன்ற விவாதத்தை நடத்துவது என்றும் –

நேற்றைய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டதாக அறிய வந்தது. (உ)

# ஊடகவியலாளர்கள் உண்மைக்காக உழைக்க வேண்டும்

## ஜனாதிபதி கோரிக்கை

ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகையாளர் கள் எப்போதும் சரியானவற்றை தெரிவுசெய்து, உண்மைக்கு மதிப்பளித்து தமது பேனா முனை களைப் பாவிக்க வேண்டும் என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுயலாபத்துக்காக தவறு செய்யும் அரசியல் வாதிகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு ஊடகவிய லாளர்கள் துதிபாடுகின்றமை மிகவும் துர்ப்பாக் கியமானது எனவும் ஜனாதிபதி குறிப் பிட்டுள்ளார்.

கொழும்பு நூலக ஆவண மாக்கல் சபையில் நேற்று இடம் பெற்ற சிரேஷ்ட ஊடகவியலா ளரான டி.பி.தனபாலவின் நினைவு முத்திரை வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எவ்வளவு தவறிழைத்தாலும் அவர்கள் தொடர் பில் குறிப்பிடாமல் இருப்பதும், எவ்வளவு சரியான தாக இருந்தாலும் சிலரை இலக்கு வைத்து தாக்கு வதையும் இன்று ஊடகங்களில் காணக்கூடியதாக உள்ளது. மக்களுக்காகச் சரியான, தர மான, பெறு மதியானவற்றை சமூகத்துக்கு வழங்குவது அடுத்த சந்ததிக்காக ஊடகவியலாளர்கள் தமது பேனா முனையினால் ஆற்ற வேண்டிய பணியாகும். – என்றார்.

# சிறையில் இருந்து சிங்களச் சகோதரனுக்கு...! நூல் வெளியீட்டு நிகழ்வு

சமூக நேசரும் தமிழ் அரசியல் கைதியுமான விவேகானந்தனூர் சதீஸின் 'சிறையில் இருந்து சிங்களச் சகோதரனுக்கு...!' கவிதை நூல் வெளியீடும், 'விடியலைத் தேடும் இரவுகள்' கவிதை நூல் அறி முக நிகழ்வும் யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் எழுகலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வரவேற்பு உரையை சமூக ஆர்வலர் கொட்டடிக் கோமகன் நிகழ்த்த நூல் வெளியீட்டு உரை, ஆய்வுரை மற்றும் கருத்துரைகளை இலக்கியப் படைப்பாளிகளான கை. சர வணன், அஜந்தகுமார், சித்ராதர், மயூரரூபன் ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர்.

நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் முதன்மை மற்றும் சிறப்புப் பிரதிகளை நூலாசிரியரின் தாயாரான திருமதி செ.மகேஸ்வரி வெளி யீட்டு வழங்க யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தி யர் த.சத்தியமூர்த்தி, படைப்பாளிகள் உலகம் அமைப்பின் நிறுவுநர் ஐங்கரன் கதிர்காமநாதன் ஆகியோர் பெற்றுக்கொள்வர்.

நிறைவாக நன்றியுரையை நூலாசிரியரின் புதல்வியான செல்வி. காவியா சதீஸ்குமார் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் படைப்பாளிகள், இலக்கியப் பிரியர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# வவுனியாவில் நேற்று வாள்வெட்டுச் சம்பவங்கள்

## பண்டாரிக்குளத்தில் 2 பேர் படுகாயம்



வவுனியா, ஒக்.20

வவுனியா – பண்டாரிக்குளம் பகுதியில் நேற்றிரவு 7.45 மணி யளவில் இடம்பெற்ற வாள்வெட்டு தாக்குதலில் பலர் படுகாயமடைந் துள்ளனர் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட இளை ஞர் குழு இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

சம்பவத்தில் கடையொன்று சேதமாக்கப்பட்டுள்ளது. முச்சக்கர வண்டிகள் இரண்டின் மீதும் தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகப் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதனிடையே, தாக்குதலை மேற்கொண்ட நபர்களினது மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன், தாக்குதல் சம்ப வத்தை மேற்கொண்டவர்கள் கூமாங்குளம் பகுதியை சேர்ந்தவர் கள் என சம்பவத்தை நேரில் கண் டவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

★ ★ ★

## கற்பகபுரத்தில் 4 பேர் படுகாயம்

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் போது வாள்வெட்டுக்கு இலக்காகி நான்கு பேர் காயமடைந்த நிலையில், வவுனியா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இரு இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே மோதலாக உருவெடுத்து வாள்வெட்டில் முடிந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (உ–100)

# முல்லைக் கடலில் மாயமான மாணவனின் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, ஒக்.20

முல்லைத்தீவு கடலில் காணா மல்போன இரண்டாவது மாண வனின் சடலமும் மீட்கப்பட்டுள் ளது. நேற்றுக் காலைவரைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் பின்னர் அது மீட்கப் பட்டுள்ளது.

17 வயதுடைய அன்டன் அமல் ராஜ் டினோஜன் என்ற இளை ஞனது சடலமே மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுக் கடலில் நேற்று முன்தினம் தீர்த்தமாவடியன்றுகுளிக் கச்சென்ற இரு இளைஞர்களைக் காணவில்லை என தேடுதல் நட வடிக்கை நடைபெற்றுக் கொண் டிருக்கும் நிலையில், ஒருவரது சடலம் நேற்று முன்தினமே மீட் கப்பட்டது. தொடர்ச்சியான தேட லின் பின்னர் மற்றைய இளை ஞனின் உடலும் நேற்று மீட்கப்பட் டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மைத்திரியின் பதவி ஆசை

புதிய அரசமைப்பை உருவாக்கும் நல்லாட்சி அரசின் எத்தனத்துக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது.

'விடிய, விடிய இராமாயணம்; விடிந்த பின்னர் இராமன் சீதைக்கு என்ன முறை என்று கேள்வி எழுப்பிய' மாதிரி இருக்கின்றது பௌத்த மதபீடங்களின் அறிவிப்பு.

"புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கு அவசியமே இல்லை. இருக்கின்ற அரசமைப்புக்குப் பெரிய திருத்தங்களும் செய்ய வேண்டிய தேவையே இல்லை. தேர்தல் சீர்திருத்தங்களை மட்டும் செய்தால் போதுமானது. ஆகவே, புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைப் நல்லாட்சி அரசு உடன் நிறுத்த வேண்டும்." - இவ்வாறு மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்கள் இணைந்த காரக சங்க சபா அறிவித்திருக்கின்றது.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்கள் தாம் மற்றைய இரு முக்கிய பௌத்த பீடங்களான ராமன்ய நிக்காய, அமரபுர நிக்காய ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து இதே முடிவை எடுத்து, இந்த நாட்டுக்கு இப்போதைக்குப் புதிய அரசமைப்புத் திருத்தம் ஒன்று அவசியம் இல்லை என்ற தமது தீர்மானத்தை - பௌத்த பீடங்களின் ஏக முடிவாக - அறிவிக்கும் என்று இப்போது கூறப்படுகின்றது.

பௌத்த பீடங்களின் தீர்மானம் அதுதான் என்றால், புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதோ அல்லது அரசமைப்புத் திருத்த மாற்றங்களை பெரிய அளவில் ஏற்படுத்துவதோ சாத்தியமே அற்றதாகிப் போய்விடும் என்பது திண்ணம்.

பௌத்த, சிங்கள மேலாண்மை சக்திகள் இவ்வாறு மீள் எழுச்சியுற்று, சமாதானத் தீர்வு முயற்சிக்கு - நல்லிணக்க எத்தனங்களுக்கு - இப்படி நிரந்தர ஆப்பு வைக்கும் நிலைமை ஏற்பட்டமைக்குப் பிரதானமாக மூன்று காரணங்கள் இருப்பதாக நாம் கருதுகிறோம்.

முதலாவது - நாம் ஏற்கனவே இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியபடி நல்லாட்சி அரசு வந்த கையோடே - அப்போது மக்கள் மத்தியில் இருந்த மனமாற்றத்தைப் பயன்படுத்தியே - தீர்வுக்கு வழி செய்யும் அரசமைப்பு மாற்றத்தை விரைந்து முன்னெடுத்திருக்க வேண்டும். காலத்தை வேண்டுமென்றே இழுத்தடித்து, விதண்டாவாதங்கள் பண்ணி, நிலைமை சீர்கெடும் வரை காத்திருந்தமைதான் இந்தச் சூழல் ஏற்பட்டமைக்கு பிரதான காரணம். காற்றுள்ள போது தூற்றிக் கொள்ள - பருவத்தே பயிர் செய்ய - தவறியதன் மொத்த விளைவு இது.

இரண்டாவது - இந்த நிலைமைக்குப் பிரதான காரணகர்த்தர் இந்த நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் எனச் சூளுரைத்து அதிகாரத்துக்கு வந்த - பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு அதனால் வெற்றியீட்டிய - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அவரது அணியினருக்கும் அந்தப் பதவியில் வந்த ஆசை - பற்று - பிடிப்பு. ஒரு தடவை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அலங்கரிப்பதோடு, அந்த ஆட்சி முறைக்கே சமாதி கட்டுவேன் என்று முழங்கித்தான் தேர்தலில் வென்றார்; அதிகாரத்துக்கும் வந்தார்.

ஆனால் அதிகார ருசி அவரை மாற்றிவிட்டது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பேன் என்று கங்கணம் கட்டி, இறுதி மூச்சு இருக்கும் வரை அதற்காகப் போராடிய வண. சோபித தேரரின் இறுதிக் கிரியையில் கூட, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகப் போய் நின்று கொண்டு, அந்த ஆட்சி முறைமையை ஒழிப்பேன் என்றுதான் பிரதிக்ஞை செய்தார் நாட்டின் தலைவர் மைத்திரிபால சிறிசேன.

ஏன், இப்போது கேட்டால்கூட, தன் நிலைப்பாடு அதுதான் என்பார். ஆனால், அதேசமயம், தான் தலைவராக இருக்கும் சுதந்திரக் கட்சியின் ஏனைய தலைவர்களைக் கொண்டு அந்த ஆட்சி முறைமை மாற்றப்படுவதற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கச் செய்வதன் மூலம் அது தொடரவும், தாம் இன்னொரு முறை ஜனாதிபதித் தேர்தலில் நின்று வெற்றி பெறவும் வாய்ப்பளிக்கும் நிலைமையைப் பேணவும் செய்கின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வழிசெய்யும் விதத்தில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு எல்லாக் கட்சிகளுமே தயாராக இருந்தன. எப்போதோ அதைச் செய்து ஒப்பேற்றியிருக்கலாம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிப்பு விடயத்தில் நல்லாட்சி அரசின் தரப்புகள் தமக்குள் முரண்டு பிடித்து நின்றதால், அதிகாரப் பகிர்வுக்கான அரசமைப்பு மாற்றங்களும் முட்டும் சந்தியில் முடங்கி இன்று பரிதாப நிலைக்கு உட்பட்டிருக்கின்றன.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு என்பது தேர்தல் சமயத்தில் நாட்டுக்கும் மக்களுக்கும் நான் அளித்த வாக்குறுதி. அதை நீங்கள் நிறைவேற்றியேயாக வேண்டும்." - என்று அரசியல் நேர்மைத்தனத்துடன் ஜனாதிபதி மைத்திரிபால செயற்பட்டிருந்தால், இந்த அரசமைப்பு மாற்றம் - இப்போது இந்த சீர்கெட்ட நிலைவரத்தை எட்ட முன்னர் - எப்போதோ நடந்திருக்கும்.

மூன்றாவது விடயம் - யதார்த்தமானது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் கனன்று கொண்டிருந்தபோது - அந்தக் குண்டு வெடிப்பு, துப்பாக்கிச் சூடு, பீரங்கி முழக்கச் சத்தங்களுக்கு நடுவே தமிழர்களின் இனப்பிரச்சினை என்ற அவலக் குரல் தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் கேட்டுக் கொண்டிருந்தது. இப்போது அந்தச் சத்தங்கள் எல்லாம் அடங்கிவிட்டதால், தமிழர்களின் இனப்பிரச்சினை என்ற குரல் தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் கேட்பதாக இல்லை.

புலிகளின் மறைவோடு இனப்பிரச்சினையும் மறைந்த விட்டதாகப் பௌத்த மதபீடம் முடிவு செய்திருப்பதும் இந்தக் காரணத்தாலேயே.

புலிகளின் வன்முறைப் போராட்டத்தைக் காலம் கடந்தும் நியாயப்படுத்தும் முடிவுகளைத்தான், தென்னிலங்கை இப்போதும் எடுத்துக் கொண்டிருக்கின்றது...!

# உரியவர்களின் பணிப்பு, அனுமதியுடனேயே ஜனாதிபதியின் நிகழ்வில் பங்கு கொண்டேன்

## மாகாண விவசாய அமைச்சர் சிவநேசன் விளக்கம்

முல்லைத்தீவு,ஒக்.20



எனக்குகட்டளையிடக்கூடியவர்களின் பணிப்பிலும் அனுமதியுடனுமே ஜனாதிபதி பங்குபற்றிய நிகழ்வில் கலந்துகொண்டேன் என வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தெரிவித்தார்

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி வருகை தந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் அவரது நிகழ்வுகளைப் புறக்கணித்திருந்தனர். எனினும், வடமாகாண விவசாய அமைச்சர் நிலாவரையில் நடைபெற்ற உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டிருந்தார். இதுதொடர்பில் பவேறுபட்ட கருத்துக்கள் நிலவிவரும் நிலையில் இது தொடர்பில் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசனிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்–

எங்களுடைய விவசாய அமைச்சுடன் இணைந்து அவர்கள் யாழ்ப்பாணத்திலே பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்தவகையிலே இந்த நிகழ்வுக்குஎங்களுடைய அழைப்பை ஏற்று ஜனாதிபதி வருகை தந்திருந்தார். விவசாய அமைச்சர் என்ற வகையில் நானும் முதலமைச்சரும் விடுத்த அழைப்பிலேயே ஜனாதிபதி அந்த நிகழ்வில் கலந்துகொண்டார். அந்த நிகழ்வு நடக்கின்ற காலப்பகுதியிலே அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான போராட்டம் நடைபெற்றது. ஆகவே இதுதொடர்பாக நான் முதலமைச்சரிடம் சென்று இந்த நிகழ்வில் கலந்துகொள்வதா எனக் கேட்டபோது ஜனாதிபதி எங்களுடைய அழைப்பிலேயே வருகிறார். எனவே அந்த நிகழ்வில் கட்டாயமாக கலந்துகொள்ளுமாறு அவர் தெரிவித்தார். அவரது பணிப்பிலேயே நான் கலந்துகொண்டேன்.

அதுமாத்திரமல்ல. இது தொடர்பில் மாகாண சபை என்ற அடிப்படையில் அவைத் தலைவரும் கருத்துத் தெரிவித்திருந்தார். மாகாண சபை உறுப்பினர்கள் நாங்கள் அனைவரும் இந்த நிகழ்வை புறக்கணிக்கிறோம் என்றார் அவர். இருப்பினும், அது உங்களுக்கு விதிவிலக்கு, நீங்கள் தலைமையேற்று நடத்துகின்ற நிகழ்வு, அதில் நீங்கள் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் சொன்னார். அவர்களுடைய கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டேன்.

நிச்சயமாக இது நான் தன்னிச்சையாக எடுத்த முடிவல்ல. எனக்கு யார் யார் கட்டளையிட வேண்டுமோ அவர்களது வேண்டுகோளை ஏற்று எடுத்த முடிவே. - என்றார்.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட போது ஜனாதிபதியுடன் என்ன விடயங்களைக் கலந்துரையாடினீர்கள் என்று கேட்டபோது –

யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு செய்கைக்கான விதை உருளைக்கிழங்கு மானிய அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரினேன்.

இன்று மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்ற – புகையிலை உற்பத்தி தொடர்பில் பேசினேன், புகையிலை ஒழிக்க வேண்டும் என்ற தங்களது கோரிக்கை அடிப்படையில் இங்கு மிகப்பெரும் பணப்பயிராக இருக்கின்ற இதனை நிறுத்துவதால் வாழ்வாதார பிரச்சினை உள்ளதாகத் தெரிவித்தேன். இதுதொடர்பில் மீண்டும் ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாம் என ஜனாதிபதி தெரிவித்தார். மற்றும் வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள் கடந்த கால வறட்சி காரணமாக அதனைச் செலுத்த முடியாமல் உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டினேன். வங்கிகளுடன் உரையாடி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி உறுதி அளித்தார்.

விவசாயிகளின் அறுவடை காலங்களில் அதே அறுவடைப் பொருள்களின் இறக்குமதியும் இடம்பெறுவதால் உற்பத்திப் பொருள்களை நியாய விலையில் விற்க முடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர். அதற்காகக் குறித்த காலப்பகுதியில் இறக்குமதியை நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்தேன். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# சுவிஸில் கொல்லப்பட்ட இலங்கை இளைஞர்; குடும்பத்தாருக்கு அழைப்பு விடுத்த சுவிஸ் அரசு!

கொழும்பு, ஒக்.20

அண்மையில் சுவிட்ஸர்லாந்தின் டிசினோ மாகாணத்தில் அகதிகள் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்த இலங்கை இளைஞரான சுப்பிரமணியம் கரன் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டார்.

இந்தநிலையில், சுப்பிரமணியம் கரனின் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்து கொள்வதற்கு அவரின் குடும்பத்தினருக்கு சுவிஸ் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

அந்தவகையில், முல்லைத்தீவை சேர்ந்த சுப்பிரமணியம் கரனின் வீட்டிற்கு சுவிஸ் நாட்டுத் தூதரக அதிகாரிகள் அண்மையில் விஜயம் செய்திருந்த நிலையில், குடும்பத்தாரின் கஷ்ட நிலையையும் பார்வையிட்டிருந்தனர்.

இதனையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை குடும்ப உறுப்பினர்கள் சுவிஸ் தூதரகத்தால் கொழும்புக்கு அழைக்கப்பட்ட நிலையில், மிகவிரைவில் சுவிஸ் செல்வதற்கு பணிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, உயிரிழந்தவரின் மனைவி, இரு மகள்கள் மற்றும் சகோதரன் உள்ளிட்டவர்கள் இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து கொள்வதற்கு சுவிஸ் அரசின் செலவுடன் அந்த நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகாமில் சக அகதிகளுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய சமயத்தில் அங்குள்ள சக அகதிகளால் பொலிஸாருக்கு முறையிடப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த சுவிஸ் நாட்டுப் பொலிஸார், இந்த இலங்கையரைச் சுட்டுக்கொன்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017

மார்பகப் புற்றுநோய் அபாயத்தைக் குறைக்கும் காரணிகள்:
- கொழுப்புணவு வகைகளைக் குறைவாக உள்ளெடுத்தல்.
- அதிகளவு மரக்கறி, பழவகைகளை உள்ளெடுத்தல்.
- உடற்பயிற்சியில் கிரமமாக ஈடுபடுதல்.
- உடல்நிறை அதிகரிக்காது பேணிவருதல்.
- மதுபானம், புகைத்தல் பழக்கமற்றிருத்தல்.
- தன்முனைப்பற்ற புகைத்தலில் இருந்து விலகியிருத்தல்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

21.10.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : சுவாதி மு.ப. 10.49 வரை
திதி : துதியை பி.இ. 2.43 வரை

சுபநேரம் : 3.02 - 4.32 வரை
இராகுகாலம்: 9.02 – 10.32 வரை

# புதிய அரசமைப்பு உருவாக்கப் பணியை நிறுத்தக் கோருகின்றன பௌத்த பீடங்கள்



கோப்புப்படம்

கொழும்பு, ஒக். 20

புதிய அரசமைப்பை வரையும் பணிகளை இலங்கை அரசு நிறுத்த வேண்டும் என்று, மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் இணைந்த காரக மகா சங்க சபா கோரியுள்ளது.

தலதா மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் இணைந்த காரக மகா சங்க சபா உறுப்பினர்களின் சிறப்புக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு மல்வத்த மகா விகாரையின் வண. அனு நாயக்க தேரர் திம்புல் கும்புர விமலதர்ம தேரர், அஸ்கிரிய மகா விகாரையின் அனு நாயக்க தேரர்களான வண. வேரடுவே உபாலி தேரர், மற்றும் வண. ஆனமடுவே சிறிதம் மதாசி நாயக்க தேரர் ஆகியோர் தலைமை தாங்கியிருந்தனர்.

இரண்டு மணிநேரம் நடந்த கூட்டத்துக்குப் பின்னர், இதில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாக, மல்வத்த மகா விகாரையின் வண. அனு நாயக்க தேரர் திம்புல்கும்புர விமல தர்ம தேரர் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பு பொருத்தமற்றது. நாடாளுமன்றத்தைப் பலவீனப்படுத்தி அதன் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கும், உள்ளூராட்சிச் சபைகளுக்கும் பகிரும் வகையில், இது அமைந்திருக்கிறது.

இந்த அரசமைப்பு பொருத்தமற்றது என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

புதிய அரசமைப்பு தேவையற்றது. தற்போதைய அரசமைப்பே எமக்கு நல்லது.

அஸ்கிரிய, மல்வத்த மகா நாயக்கர்கள் மற்றும் ராமன்னய, அமரபுர நிக்காயாக்களுக்கு விளங்கப் படுத்தி விட்டு மகா சங்கத்தின் எதிர்ப்பை நாங்கள் வெளிப்படுத்துவோம். அரசமைப்பை வரையும் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கோருகிறோம்.

தற்போதைய அரசமைப்பே எமக்குச் சிறந்தது. ஜனாதிபதியின் அதிகாரங்கள் அப்படியே இருக்க வேண்டும். ஆனால், தொகுதிவாரி முறைப்படியான தேர்தல் முறை அமைய வேண்டும்.

முன்மொழியப்பட்ட அரசமைப்பு வரைவுக்கு மகாசங்கம் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் கலாநிதி வண. மெதகம சிறி தம்மானந்த தேரர் தெரிவித்தவை வருமாறு:-

இப்போதைய நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்குவது, இன மற்றும் சமூகப் பிளவுகளுக்கே இட்டுச் செல்லும்.

ஒற்றையாட்சி கொள்கையை கைவிடும், அரசின் அதிகாரத்தை பரவலாக்கும் யோசனைகள், மோசமான நிலையை ஏற்படுத்தும். நாட்டைப் பிளவுபடுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

# சர்வதேச நெல் ஆய்வு நிறுவனத்தின் நடவடிக்கை அலுவலகம் இலங்கையில்!




கொழும்பு, ஒக். 20

பிலிப்பைன்ஸில் தலைமையகத்தை கொண்டுள்ள சர்வதேச நெல் ஆய்வு நிறுவனத்தின் நடவடிக்கை அலுவலகம் ஒன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

பத்தலகொட நெல் ஆய்வு நிறுவனத்தில் இதனை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக சர்வதேச அரிசி ஆய்வு நிறுவனமும் இலங்கையிலுள்ள நெல் ஆய்வு நிறுவனத்திற்கும் இடையில் புரிந்துணர்வுடன் படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது என விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக அமைச்சர் சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கைக்குத்தேவையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவை பெற்றுக் கொள்வதே இந்த சர்வதேச நெல் ஆய்வு நடவடிக்கை அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைப்பதன் நோக்கமாகும்.

பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியை நவீனமயப் படுத்தல் மற்றும் முழு வசதிகளையும் கொண்டதாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபை, சம்பந்தப்பட்ட மாகாண நிறுவனங்களுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்காக மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பொரளை, நுகேகொட, மஹரகம, தெஹிவளை, கல்கிஸ்சை, மொரட்டுவ மற்றும் கட்டுபெத்த நகரங்களில் அமைந்துள்ள பொது வர்த்தக கட்டடத் தொகுதி இதன்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு மைதானம் இன்று திறப்பு

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் கூடைப்பந்து விளையாட்டு மைதானத் திறப்பு விழாவும் கையளித்தல் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபர்சு.புண்ணியசீலன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் க.விஜிதரன், கௌரவ விருந்தினர்களாக யூனியன் கல்லூரியின் பிரதி அதிபர் வே.வில்லவராயர், முன்னாள் பிரதி அதிபர்களான இ.சண்முகேஸ்வரன், வே.சந்திரசேகர் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.



# 9 போர்க் கப்பல்கள் இலங்கை வருகை!

கொழும்பு, ஒக். 20

அடுத்த மாதம் நடுப்பகுதி வரையிலான காலப்பகுதியில் ஆறு நாடுகளின் ஒன்பது போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகின்றன.

இந்த விஜயங்களின்போது இலங்கை கடற்படையுடன் பல்வேறு கூட்டு ஆயுதப் பயிற்சிகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக சர்வதேச நாடுகளின் போர்க் கப்பல்கள் இலங்கை நோக்கி விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் அண்மைக் காலமாக இலங்கை நோக்கிய எந்த விஜயமும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், அடுத்த மாதம் பத்தாம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஆறு நாடுகளை சேர்ந்த ஒன்பது போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வருகின்றன.

அதன் அடிப் படையில் இந்தோனேசிய கடற்படையின் போர்க் கப்பல் நேற்று இலங்கையை வந்தடைந்த நிலையில் எதிர்வரும் 23 ஆம் திகதி பங்களாதேஷ் கடற்படையின் போர்க்கப்பல் ஒன்றும் 26ஆம் திகதி தென் கொரியாவின் இரண்டு போர்க் கப்பல்களும் இலங்கை வரும்.

நவம்பர் மாதம் 2ஆம் திகதி இந்தியாவின் இரண்டு போர்க் கப்பல்களும், நவம்பர் மாதம் 4ஆம் திகதி இந்தோனேஷியாவின் போர்க்கப்பல் ஒன்றும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி பாகிஸ்தான் போர்க் கப்பல் ஒன்றும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி சீன போர்க்கப்பல் ஒன்றும் இலங்கைக்கு விஜயம் செய்கின்றன.

இந்த கப்பல்கள் வெவ்வேறு காலத்தில் விஜயம் செய்கின்ற நிலையில் இலங்கையில் நங்கூரமிடப்பட்டுள்ள காலப்பகுதியில் இலங்கை கடற்படையுடன் இணைந்து கூட்டு ஆயுத பயிற்சிகளையும் முன்னெடுக்கவுள்ளது என இலங்கை கடற்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# மக்களின் அச்சம் போக்க பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

மட்டக்களப்பு, ஒக். 20

தற்போது நடக்கின்ற சில சம்பவங்களை நோக்கும் போது மனிதம் குழி தோண்டி புதைக்கப்பட்டுவிட்டதா என்ற சந்தேகம் தோன்றுகிறது என கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் தாயும், மகனும் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் தாயும், மகளும் கொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்று அதன் வடுக்கள் இன்னும் மக்கள் மனங்களில் இருந்து ஆறாத நிலையில் ஏறாவூரில் மற்று மோர் இரட்டைக் கொலை இடம்பெற்றுள்ளமை சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை காட்டி நிற்கின்றது.



## நசீர் அஹமட் தெரிவிப்பு!

ஏறாவூர் பகுதியில் தாயும், மகனும் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கேள்வியுற்றதும் மிகவும் அதிர்ச்சியடைந்ததுடன், தீபாவளித் தினமான பண்டிகைத் தினத்தில் இவ்வாறான மனிதாபிமானமற்ற கொடூர குற்றச் செயல்கள் இடம் பெறுகின்றமை வேதனையளிக்கின்றது.

தமிழ் மக்கள் தீபாவளியினை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வரும் நேற்று முன்தினத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் குறித்த பகுதி மக்கள் மிகுந்த அச்சத்துக்குள்ளாகியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அழைப்பினை மேற்கொண்டு மக்களின் அச்சத்தை போக்கும் வகையில் குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டிக் கொண்டேன்.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. விரைவில் குற்றவாளிகளை கைது செய்வதற்கான விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளது என பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் என்னிடம் குறிப்பிட்டார்.

அத்துடன் சவுக்கடி மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் பாதுகாப்பை பலப் படுத்தியும் நகர் முழுவதும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்தக் கொலைகள், கொள்ளைக்காக முன்னெடுக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

கடந்த வருடம் முஸ்லிம்கள் நோன்பு நோற்றிருந்த ஹஜ்ஜுப் பெருநாளுக்கு முந்தைய தினமாம் அரபாதினத்திலேயே தாயும், மகளும் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதேபோல், இந்துக்கள் தீயவை தோற்கடிக்கப்பட்டமையை கொண்டாடும் தீபாவளித் தினத்தில் தாயும், மகனும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

புனித தினங்களிலும் கொடூர குற்றச்செயல்கள் இடம் பெறுமளவுக்கு சமூகத்தின் நிலைமை மாற்றமடைந்திருப்பதை எண்ணி வேதனையுறுகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# உள்ளூராட்சித் தேர்தலில் தனித்து போட்டியிட த.ம.விடுதலைப் புலிகள் கட்சி தீர்மானம்!

மட்டக்களப்பு, ஒக். 20

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்து படகுச் சின்னத்தில் போட்டியிட உள்ளது என கட்சியின் பொதுச் செயலாளர் பி.பிரசாந்தன் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாநகரசபைக் கிளை உறுப்பினர்களுடனான கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் அதிகாரம் தேவை என்பதை மக்கள் கூறத்தொடங்கிவிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மட்டக்களப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு, நிதி, நிர்வாக எல்லை, முரண்பாடுகளை கண்டும் காணாமல் இருக்கின்றது.

நிதி, நிர்வாக, காணி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் இரண்டரை வருட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணக்க ஆட்சி பெரும் பின்னடைவை தமிழருக்கு ஏற்படுத்தியுள்ளது.

இனிமேலும் பாதிப்புக்களை சீர்படுத்துவதற்கு மேலும் இரண்டு தடவைகளாவது சந்திரகாந்தன் முதலமைச்சராக ஆட்சி புரிந்தாலே முடியும் என கிழக்கு மாகாண மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாநகர சபை, ஆரையம்பதி பிரதேச சபை, செங்கலடி பிரதேச சபை, கோரளைப் பற்று, கோரளைப்பற்று வடக்கு உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் பலம் மேலோங்கப்பட்டாலே இப் பகுதிகளில் தமிழரின் இருப்பை பாதுகாக்க முடியும்.

இல்லையேல் அடுத்த ஐந்து வருடத்தின் பின்னர் பல தமிழ் எல்லைக் கிராமங்களை வரைபடத்தில் மாத்திரமே பார்க்கும் சூழல் உருவாகும்.

நாம் யாரையும் சாடவில்லை சந்திரகாந்தனால் கட்டப்பட்ட மட்டக்களப்பு பொதுநூலகத்தினை முடிப்பதற்கோ, மட்டக்களப்பு மாநகரத்தில் வெள்ளநீர்வடிந்தோடுவதற்கு அமைக்கப்பட்ட வடிகான்களும் ஆட்சி மாற்றத்தால் இடைநடுவே நிற்கின்றது.

இவற்றைப் பூர்த்தி செய்ய முடியாத மக்கள் நலன்சார்ந்து சிந்திக்காதவர்களால் எதுவும் செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஏறாவூர் சவுக்கடி படுகொலை: கோடரி மீட்பு, தேடுதல் தீவிரம்!

மட்டக்களப்பு, ஒக். 20

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் கொலை சம்பவம் இடம்பெற்ற வீட்டின் அருகில் உள்ள பற்றையில் இருந்து கொலை செய்ய பயன்படுத்தப்பட்டது என சந்தேகிக்கப்படும் கோடரி ஒன்றை ஏறாவூர் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த நிலையில் மோப்ப நாய்களின் உதவியுடன், குற்றவாளிகளைத் தேடும் தீவிர நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் பதற்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் மரணம் சம்பவித்த வீட்டில் பிரதேச மக்கள் காத்து இருக்கின்றனர்.

மட்டக்களப்பு - ஏறாவூர் சவுக்கடி பிரதேசத்தில் வசித்துவந்த இளம் குடும்ப பெண்ணும் அவரது மகனும் கொலை செய்யப்பட்டுள்ளமை பிரதேச மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு இந்தச்சம்பவம் இடம்பெற்ற நிலையில் சந்தேகத்தின் பேரில் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தன்னாமுனை முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய பீதாம்பரம் மதுவந்தி மற்றும் அவரது மகனான



11 வயதுடைய மதுசன் ஆகியோரே கொலை செய்யப்பட்டுள்ளனர் என அடையாளங் காணப்பட்டது.

வீட்டின் கூரை வழியாக கயிற்றைக்கட்டி உள்ளே இறங்கிய அடையாளம் தெரியாத நபர்கள் இவர்களை அடித்துக் கொலை செய்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கொலைசெய்யப்பட்டவரின் கணவர் டுபாய் நாட்டிற்கு வேலைவாய்ப்பிற்காகச் சென்று ஆறு வருடங்களாகியுள்ளன எனவும், அடுத்த மாதம் நாடுதிரும்ப அவர் திட்டமிட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நகைகளை அடகு வைத்து சுமார் அறுபதாயிரம் ரூபா பணத்தை மதுவந்தி பெற்று வந்துள்ளதாகவும், அவரது வீட்டில் 30 பவுண்களுக்கு மேற்பட்ட நகைகளும் ஏற்கனவே இருந்துள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, சம்பவம்



இடம் பெற்ற பகுதிக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன் மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமாரும் நேரடியாக விஜயம் செய்து, நிலைமைகளை கேட்டறிந்துள்ளனர்.

# தென்பகுதியில் வெடிப்பு சம்பவம்; விண்கல் வீழ்ச்சியே காரணமாம்!

கொழும்பு, ஒக். 20

தென்பகுதியை நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வெடிப்பு, ஒளிப்பிளம்புக்கு விண்கல்லே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தென்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கேட்ட பெரிய வெடிப்புச் சத்தம் மற்றும் திடீரெனத் தோன்றிய ஒளிப்பிளம்பினால் மக்கள் மத்தியில் பதற்றமான நிலை காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணிக்கும் 9 மணிக்கும் இடையில், பெரும் இரைச்சல் மற்றும் வெடிப்புச்சத்தம் கேட்டதுடன், வானத்தில் ஒளிப்பிளம்பும் அவதானிக்கப்பட்டது. மாத்தறை, அக்குரஸ்ஸ, தெனியாய பகுதி மக்கள் இந்தச் சத்தத்தை கேட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் கரையோரத்தில் வசிக்கும் மக்களில் சிலர், வானத்தில் இருந்து ஒளிப்பிளம்பு தோன்றியதையும் கண்டுள்ளனர்.

தென்மாகாணத்தின் பல பகுதிகளிலும் வசிக்கும் மக்கள், வித்தியாசமான ஒளிப்பிளம்பு மற்றும் ஒலியைக் கேட்டனர் என முறையிட்டிருக்கின்றனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையப் பேச்சாளர் அத்துல கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மாத்தறை, காலி பகுதிகளில் கடலை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் சிறிய நில அதிர்வு போன்ற சத்தத்தையும் உணர்ந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் இரைச்சலுடன் வெடிப்புச் சத்தம், வானில் காணப்பட்ட ஒளிப்பிளம்பால் தென்மாகாண மக்கள் நேற்று முன்தினம் இரவு பதற்றமாகக் காணப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது, தென்பகுதி வானில் எந்த விமானங்களும் பயணம் செய்யவில்லை என்று விமானப் போக்குவரத்து அதிகார சபையினர் உறுதிப்படுத்தி உள்ளனர்.

இதுதொடர்பாகக் கருத்து



வெளியிட்ட கொழும்பு பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் சந்தன ஜெயரத்ன, விண்கல் ஒன்றால் ஏற்பட்ட வெடிப்புச் சத்தமாக அது இருக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுபோன்ற வெடிப்புகள், 'நெருப்புப்பந்து வெடிப்பு' என்று அழைக்கப்படுகிறது. விண்கல் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்ததும் இது ஏற்படுகிறது.

இந்த விண்கல் 50 செ.மீ. அளவுடையதாக இருக்கலாம். ஒவ்வொரு விண்கல்லும், பூமியின் வளிமண்டலத்துக்குள் செக்கனுக்கு 65 கி.மீ. வேகத்தில் பிரவேசிக்கும்.

அதிக வேகத்தால் வளிமண்டலத்துக்குள் நுழைந்தும், வெப்பத்தால் வெடித்துச் சிதறும். அதனால் தான் வெடிச்சத்தம் எழுகிறது.

வெவ்வேறு நிற ஒளியுடன், விண்கல் நுழைந்ததை மக்கள் பார்த்துள்ளனர். பெரும்பாலானவர்கள் பச்சை நிறத்திலும், மஞ்சள் நிறத்திலும் கண்டுள்ளனர்.


இந்த வெடிப்பு சேதங்களை ஏற்படுத்தக் கூடும். ஆனால், அதிஷ்டவசமாக, இவை சிறிய துண்டுகளாக உடைந்துள்ளது.

விண்கல்லின் பாகங்களை மக்கள் தொடக் கூடாது. அதில் கதிரியக்கத் தாக்கங்கள் இருக்கக் கூடும். அதனால் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படும். இனந்தெரியாத பக்ரீரியாக்கள் அதில் இருக்கும். - என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் இரவு தோன்றிய ஒளிப்பிளம்பு பற்றிய எந்தச் சம்பவமும் பதிவாகவில்லை என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை கடற்படை, விமானப்படை என்பனவும், எத்தகைய சம்பவங்களும் இடம்பெறவில்லை என்று உறுதி செய்துள்ளன. (க)

## ஜே. ஆரின் பேரன் அரசியலில் குதிக்கிறார்!



கொழும்பு, ஒக். 20

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பேரன், பிரதீப் ஜெயவர்த்தன அரசியலில் குதிக்கவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவர் கொழும்பில் நடத்தவுள்ள செய்தியாளர் சந்திப்பில் அரசியலில் நுழையும் தமது முடிவை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின்தற்போதைய அரசமைப்பையும், இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையையும் அறிமுகப்படுத்திய ஜே. ஆர்.ஜெயவர்த்தன, 1978 ஆம் ஆண்டு தொடக்கம், 1989ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாக பதவியில் இருந்தவர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மகனான ரவி ஜெயவர்த்தனவின் மகனே பிரதீப் ஜெயவர்த்தன ஆவார்.

## மீண்டும் போட்டியிட்டால் மைத்திரியை தோற்கடிப்போம் என்கிறது ஜே.வி.பி.!

கொழும்பு, ஒக். 20

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிட்டால் அவரைத் தோற்கடிப்போம் என்று ஜே.வி.பி. எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஜே.வி. பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேனவுக்குத் தார்மீக உரிமை கிடையாது.

மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதிகளை மீறி அடுத்த அதிபர் தேர்தலில் அவர் போட்டியிடுவாரானால், மஹிந்த ராஜபக்ஷவைப் போலவே அவரையும் மக்கள் தோற்கடிப்பார்கள்.

நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிப்பது தொடர்பாகத் தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி வெளிப்படுத்த வேண்டும்.

மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார்.

வண.மாதுளுவாவே சோபித தேரரின் இறுதிச்சடங்களில் அதனை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

எனவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி எத்தகைய நிலைப்பாட்டை எடுத்தாலும், மீண்டும் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கான தார்மீக உரிமை அவருக்குக் கிடையாது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை அவர் காப்பாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மத்தள விமான நிலையம் குறித்து இன்னமும் முடிவு இல்லை என்கின்றார் அமைச்சர் மஹிந்த!

கொழும்பு, ஒக். 20

மத்தள விமான நிலையம் தொடர்பாக இலங்கை அரசு இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்தள விமான நிலையத்தில் தனியார் முதலீடுகள் தேவை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

கடுமையான இழப்புகளின் மத்தியிலேயே இந்த விமான நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இழப்புகளை ஈடுசெய்யவும், பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்க




வும், அதனை முழுமையாக இயக்குவதற்கும் தனியார் முதலீடுகள் தேவை.

எனினும், விமான நிலையம் தொடர்பாக இன்னமும் இறுதியான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இது கூட்டு எதிரணிக்கும் நன்றாகவே தெரியும். இருந்தாலும், அவர்கள் அண்மையில் இந்திய நிறுவனத்துக்கு விமான நிலையத்தை விற்கப் போவதாகக் கூறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அம்பாந்தோட்டையில் நடத்தினார்கள்.



அவர்களின் போராட்டம் விமான நிலையத்துக்காக அல்ல. அது அம்பாந்தோட்டையின் அரசியலுக்காக நடத்தப்பட்டது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தயாராகின்றது வடக்கு மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம்

வடமாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் இடமாற்ற விவகாரத்தை ஒட்டித் தொழிற்சங்க நடவடிக்கைக்குத் தயாராவதாக அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்காக நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கத்தின் ஆசிரியர்கள் அனைவரும் யாழ். மத்திய கல்லூரியில் ஒன்று கூடுகின்றனர் என்றும் அதில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2012 - 2014 காலப்பகுதியில் கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய உதவியார்களாகப் பயிற்சி பெற்றோரின் அமைப்பே இவ்வாறு தொழிற்சங்கநடவடிக்கைக்குத் தயாராகி வருகின்றது.

தொண்டர் ஆசிரியர்களாக நீண்டகாலம் பணியாற்றி 2009 ஆம் ஆண்டு நவம்பரில் குறைந்த ஊதியத்துடன் ஆசிரியஉதவியாளர்களாக உள்ளீர்க்கப்பட்ட சுமார் 420 ஆசிரியர்களே தங்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது எனத் தெரிவித்துப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றார்கள்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

மேற்படி ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி முடித்த நாம் 2014 ஆம் ஆண்டில் சொந்த மாவட்டங்களில் பணி நியமனம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், வன்னிப் பகுதியில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு உள்ளீர்ப்பதாயின் ஏற்டும் வெற்றிடங்களுக்குப் பணியாற்றி உதவும்படி கோரப்பட்டோம். அந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி வசதி அளிப்பதற்காக, நாம் குறைந்த ஊதியத்துடனும் 3 வருடகாலம் வெளி மாவட்டங்களில் பணியாற்றப் பெருந்தன்மையுடன் இசைந்து முன்வந்தோம்.

மூன்று வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளி மாவட்டத்தில் பணியாற்ற முன்வந்த எமக்கு அந்தப் பணிக்காலம் கடந்த மே மாதத்துடன் முடிவடைந்தமையை அடுத்து இது தொடர்பாக முன்னைய மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசாவைச் சந்தித்துப் பேசினோம்.

முன்னரே காணப்பட்ட இணக்கத்தின்படி கடந்த 2 ஆம் தவணையின் போதே எம்மைச் சொந்த மாவட்டங்களுக்குப் பழையபடி அனுப்புமாறு 08-05-2017 அன்று கடிதம் மூலம் கல்விச் செயலாளருக்கு அவர் பணிப்புரை விடுத்திருந்தார்.

ஆனால், இடைத்தவணையில் இடமாற்றங்களை வழங்க முடியாது எனக் குறிப்பிட்ட மாகாணப்பணிப்பாளர்,ஆண்டு நிறைவின் போது இடமாற்றங்களை வழங்குவார் எனவலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக அறிவித்திருந்தார்.

இதற்கமைய நாம் அனைவரும் மாற்றத்துக்கான விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களின் சிபாரிசுடன் கடந்த ஜூன் மாதமே அனுப்பிவைத்துவிட்டோம்.

ஆனால், தற்போதைய - புதிய கல்வி அமைச்சர் புதிய இடமாற்றக் கொள்கை வகுக்கப்படுகின்றது என்று கூறுகின்றார். நாங்கள் மேலும் பல காலம் வெளிமாவட்டங்களில் பணியாற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது மாகாணக் கல்வித் திணைக்களம்.

உதவி செய்வதற்காக வன்னிக்கு வந்தவர்களுக்கு இப்போது புதிய கொள்கை வகுப்பு என்றுவன்னியிலேயே-வெளிமாவட்டத்திலேயே-தொடர்ந்து பணியாற்றக் கட்டாயப்படுத்துவது நியாயமா?

புதிய கொள்கை வகுத்தால் அது புதியவர்களுக்குத் தானே பொருத்தம்? ஏற்கனவே எங்களுக்கு முன்னைய கல்வி அமைச்சரும், கல்வி அதிகாரிகளும் தெரிவித்த - உடன்பாடு கண்ட - விடயங்களைப் புதியவர்கள் வந்து தம்மிஷ்டப்படி, ஒருதலைப்பட்சமாக மாற்றி, எங்களைக் கட்டாயப்படுத்துவது சரியா?

பல தடவைகள் எமது நிலைப்பாட்டையும் பிரச்சினைகளையும் நாம் குறைந்த ஊதியத்துடன் 5 ஆண்டுகளுக்கு ஆசிரிய உதவியாளர் தரத்தில் பணியாற்றியமை பற்றியும் எடுத்துக் கூறியும் எந்தப் பயனும் இல்லை.

ஆகவே, எமது ஆசிரியர்கள் அனைவரும் இணைந்து பெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட முடிவு எடுத்துள்ளோம். - என்றார்.

(உ)

## தினசரி ராசி பலன் 20.10.2017

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 4 ஆம் நாள் வெள்ளிக்கிழமை. பிரதமைத் திதி பி.இ. 1.37 மணிவரை. பின்னர் துவிதீயை. நட்சத்திரம் சித்திரை காலை 8.38மணிவரை. பின்னர் சுவாதி. சித்தயோகம் முழுவதும். இன்று கந்தசஷ்டி விரதாரம்பம்.*

**ராகுகாலம்** - *பகல் 10.26 மணிமுதல் 11.55 மணிவரை.*

**சுபநேரம்** - *மாலை 6.03 மணிமுதல் 7.33 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *ஐப்பசி மாத அமாவாசை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சித்திரை.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் போட்டிகளைத் தாண்டி ஓரளவு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பிறரின் வேலைகளையும் தாமே செய்வார்கள்.

**ரிஷபம்:** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். புது வாகனம் வாங்குவார்கள். வீடு வாங்குவது சுலபமாக இருக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் வரவு உயரும்.

**மிதுனம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். அரச காரியங்கள் அனுகூலமாகும். வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்:** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். கடன் பிரச்சினையால் கவலை உண்டாகும். உடல்நலம் பாதிப்புற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**சிம்மம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு சுமாராக இருக்கும். வியாபாரத்தில் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்க வேண்டாம். உத்தியோகத்தில் அதிக நேரம் உழைக்க வேண்டிவரும்.

**கன்னி:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். சிலர் புதுவீடு கட்டத் தொடங்குவார்கள். புதிய முயற்சிகள் வெற்றியடையும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டாகும். அரச வழியால் அனுகூலம் உண்டாகும்.

**துலாம்:** கவலையான நாள். வருமானம் குறையும். சுயதொழில் ஆதாயம் குறையும். உடல் ஆரோக்கியம் குன்றும். தொழிலில் அலைச்சல்கள் அதிகரிக்கும். திருமணப் பேச்சுக் குழம்பிய நிலையில் இருக்கும்.

**விருச்சிகம்:** மேன்மையான நாள். எதையும் சாதிக்கும் வல்லமை பெறுவார்கள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். பழைய வீட்டைப் புதுப்பிக்கத் திட்டமிடுவார்கள். வழக்குகள் சாதகமாகும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். கடன் பிரச்சினைகள் மன அவதியைத் தரும். உடல்நலக் கோளாறு ஏற்படும். பணம், நகை இரவல் கொடுத்தலைத் தவிர்க்கவும்.

**மகரம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வருவாய் ஓரளவு இருப்பினும், செலவுகள் அதிகரிக்கும். புதிய தொழில் முயற்சியைத் தவிர்க்கவும். பிரிந்த பழைய சொந்தங்கள் ஒன்று சேர்வார்கள்.

**கும்பம்:** உயர்வான நாள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர புதுயுக்திகளைக் கையாள்வார்கள். அயல்நாட்டில் இருப்பவர்களால் பயன் அடைவார்கள்.

**மீனம்:** துயரமான நாள். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் அமைதி குறைந்து காணப்படும். உறவினர்களால் தொல்லைகள் உண்டாகும். தாயாரின் உடல்நிலை பாதிப்படையும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களைத் தவிர்க்கவும்.

## நூல் அறிமுக விழா இன்று நல்லூர் நாவலர் மண்டபத்தில்

சிவபூசை முறைகளில் சித்தாந்தவிளக்கம் (ஆன்மார்த்தம்) நூல் அறிமுகவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ளஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ணஐயர் கலந்துகொள்வார்.

தேவாரம்: அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம், வரவேற்புரை: இலங்கைசைவத் தமிழ்ப் பண்பாட்டு மன்றங்களின் ஒன்றிய செயலாளர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் ஐயா, ஆசியுரை: சைவக்குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்கள், தலைமையுரை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் மா.வேதநாதன். தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையை பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் நிகழ்த்துவார்.

நூல் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை பேராசிரியர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் ஆற்றுவார். நூல் நயம் காணல்: வல்லிபுரம் ஆறுமுகம் தங்கமயில், சைவப்புலவர் கந்தசத்தியதாசன், திருவாவடுதுறை ஆதீன ஏ.அநுசாந்தன், பண்டிதர் பொன்னம்பலவாணக் குருக்கள் ஆகியோர்.

ஏற்புரையை நூலாசிரியர் சிவத்திரு செ.சொர்ணலிங்கமும் நன்றியுரையை கொழும்பு சிவத்திருமன்ற உப செயலாளர் திருமதி புவனராணி இரகுநாதனும் வழங்குவர்.

(இ)

## கவிதை நூல் வெளியீடு

*1000 கவிஞர்களின் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும்.*

*32 நாடுகளைச் சேர்ந்த 1098 கவிஞர்களின் கவிதைகள் நூலில் இடம்பெறவுள்ளன.*

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 20

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளைசனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை-

**யாழ். பிரதேசத்தில்** பொன்னாலை, காரைநகர், வடலியடைப்பு, தொல்புரம், சுத்திய காடு, கள்ளவேம்படி, சுழிபுரம், பத்தானை கேணியடி, காரைநகர் கடற்படை ஜெற்றி, காரைநகர்இராணுவ கடற்படை முகாமிலும் -

**வவுனியாபிரதேசத்தில்** சாளம்பைக்குளம் -

**மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளம், நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம், மாந்தை மேற்கு ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார்.



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

131




**அத்தியாயம் - VIII**

## வன்னியில் அனுபவித்த இன்னல்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னியை நோக்கிய தந்திரோபாயப் பின்நகர்வு, இராணுவ ரீதியில் பார்க்கப்போனால், பிரபாகரனின் மதிநுட்பமான முடிவாகும். நுழைய முடியாத, அடர்ந்த காடுகளை கவசமாகக் கொண்ட வட இலங்கையின் இதய பூமியில் ஒரு பெரிய படைத் தளத்தை அமைத்துப் பலப்படுத்தி பிரபாகரன், விடுதலைப் புலிகளின் இராணுவ இயந்திரத்தை மறுசீரமைக்கும் பிரமாண்டமான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். போர்த்திறனில் வல்லுநர் என்ற ரீதியில், காடுகள் நிறைந்த வன்னியின் பெருநிலப்பரப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும், அங்குதான் எதிர்காலத்துச் சமர்கள் நிகழ்த்தப்படவேண்டும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். சிங்களத் தலைமையின் இராணுவ அபிலாஷைகளையும் அவர் நன்கறிவார். சிங்கள இராணுவம்பெரியபடையெடுப்புக்களை மேற்கொள்ளலாம் என எதிர்பார்த்த பிரபாகரன், காட்டுப்புறக் கெரில்லாப் போரிலும், மரபு வழி யுத்தத்திலும் நன்கு பயின்ற, மிகவும் சக்திவாய்ந்த ஒரு விடுதலை இராணுவத்தைக் கட்டியெழுப்ப முடிவு செய்தார். விடுதலைப் புலிகளின் படையணிகளை ஆட்பல ரீதியாகவும், போர்த்திறன் ரீதியாகவும் வல்லமை படைத்த சக்தியாக உருவாக்கும் நோக்கில் பெருமளவில் ஆட்சேர்ப்பை நடத்தி, பயிற்சித்திட்டங்களை செயற்படுத்தினார். இந்தப் போர்த் திட்டங்கள்நிறைவு பெற்றதும் வன்னிப் பிராந்தியத்திலுள்ள ஒரு பெரிய சிங்கள இராணுவத்தளம் மீது வலிந்து தாக்குவதற்குத் திட்டம் தீட்டினார். 1996 ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தின் ஆரம்பப் பகுதியில் இந்தப் போர் நடவடிக்கை இடம்பெற இருந்தது.

ஒரு பெரிய தாக்குதல் நடவடிக்கைக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன என்பதை நாம் அறிவோம். தாக்குதல் நடவடிக்கையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் மந்திராலோசனையில் தூக்கமற்ற பல இரவுகளைத் தமது மூத்த தளபதிகளுடன் பிரபாகரன் செலவிடுகிறார் என்பதும் எமக்குத் தெரியும். எந்த இராணுவத் தளம் தாக்குதலுக்கு ஆளாகப் போகின்றது என்பதை நாம் இறுதிக் கட்டத்தில்தான் அறிய முடிந்தது. வன்னியில் சிங்கள இராணுவத்தின் நிலைகளை நன்கு அறிந்திருந்த பாலா, முல்லைத்தீவு இராணுவத் தளம் தாக்கப்படப் போகின்றது என்பதை சரியாகவே எதிர்வு கூறினார். பிரபாகரனுடன் மிகவும் நெருக்கமாக இருந்தபோதும், இராணுவத் தாக்குதல் திட்டங்கள் பற்றி, பாலா அவரிடம் கேட்டறிகின்றமையைத் தவிர்த்துக் கொண்டார். ஆயினும், ஒரு போர் நடவடிக்கையோ அன்றி ஒரு தாக்குதல் சம்பவமோ நிகழ்ந்தவுடன், அது பற்றிய முழு விவரங்களையும் சேர்த்துக் கொண்டு, முதன் முதலாக பிரபாகரன், பாலாவை சந்திக்க வருவார். இந்தத் தகவல்களை ஆதாரமாக வைத்து, உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கு பத்திரிகை அறிக்கையை தயாரிப்பார் பாலா.

1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் திகதி, 'ஓயாத அலைகள்' என்ற பெயரில், முல்லைத்தீவு இராணுவத் தளம் மீது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பெரிய இராணுவத் தாக்குதலை நிகழ்த்தியது. முல்லைத்தீவு இராணுவ முகாம் ஒரு பெரும் தளம். பழைய முல்லைத்தீவு பட்டினத்தை உள்ளடக்கியதாக 2900 மீற்றர் நீளமும், 1500 மீற்றர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் இந்தத்தளம் அமையப் பெற்றிருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக மையமாகவும், இராணுவக் கட்டளைப் பீடமாகவும் செயற்பட்டு வந்த இந்தப் பெரும் தளம், முல்லைத்தீவு கடலோரமாக நிலைகொண்டிருந்தது. நன்கு பயிற்சி பெற்ற, நவீன ஆயுதங்கள் தரித்த, விடுதலைப் புலிகளின் படையணிகள், தரை மார்க்கமாகவும், கடல் வழியாகவும் முல்லைத்தீவு இராணுவத்தளம் மீது தாக்குதலைத் தொடுத்தன. பல மணி நேரமாக நிகழ்ந்த கடும் சண்டையை அடுத்து இராணுவத் தளத்தின் முன்னணிப் பாதுகாப்பு வலயம் ஊடறுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல மினிமுகாம்களையும், பீரங்கி மோட்டார் தளங்களையும், மையக் கட்டளைப் பீடத்தையும் புலிப் படைவீரர்கள் கைப்பற்றினர். 24 மணி நேரத்துக்குள் முல்லைத்தீவுப் பெருந்தளம் முழுமையாக விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்தது. இதனையடுத்து, உதவிப் படையணிகளை அவசரமாக இராணுவம் அனுப்பி வைத்தது. இந்தப் படையணிகள் முல்லைத்தீவுத் தளத்துக்கு ஆறு மைல் தெற்கே, கடல்வழியாகத் தரையிறங்கி, நிலைகளை அமைத்தன. இந்தப் படையணிகளை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கி பெரும் உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தியதன் விளைவாக அவர்கள் அங்கிருந்து பின்வாங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனையடுத்து, முல்லைத்தீவு கடலோரமாக சிங்கள இராணுவத்தினரைத்தரையிறக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை புலிகளின்படையணிகள்முறியடித்தன. ஜூலை மாதம் 26ஆம் திகதி வரை சண்டைகள் தொடர்ந்தன. இறுதியில், உதவிக்கு அனுப்பப்பட்ட சிங்களப் படையணிகள், சிதைந்த நிலையில் பின்வாங்கின. சிங்கள இராணுவம் என்றுமில்லாதபடி பெரும் தோல்வியைச் சந்தித்தது. இந்தச் சமரில் ஆயிரத்து முந்நூறு படையினர் கொல்லப்பட்டனர். 122 எம். எம் பீரங்கிகள், 120 எம்.எம் கனரக மோட்டார்கள், அவைக்குரிய ஆயிரக்கணக்கான எறிகணைகள் மற்றும் பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுத தளவாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை இதுவொரு மகத்தான இராணுவ வெற்றி. முல்லைத்தீவு சமரில் முந்நூற்று முப்பத்தியிரண்டு போராளிகள் வீரச் சாவைத் தழுவிக்கொண்டனர்.









இறுதி நாள் சமரின்போது (26 ஜூலை) முல்லைத்தீவு பெரும் தளத்திலிருந்து இராணுவத் தளவாடங்களைப் புலிப் படைவீரர்கள் அகற்றிக் கொண்டிருந்த சமயம், சிங்கள இராணுவம் ஆனையிறவுத்தளத்திலிருந்து 'சத்ஜெய' என்ற பெயரில் மின்னல் வேகத் தாக்குதலை நடத்தி பரந்தனைக் கைப்பற்றியது. முல்லைத்தீவில் என்றுமில்லாத பெரும் தொகையில் உயிர்ச்சேதம் அடைந்து படுதோல்வியைச் சந்தித்ததன் காரணத்தால் அதிர்ச்சியுற்று இடிந்துபோன சிங்கள மக்களைத் திசை திருப்பும் நோக்குடனேயே பரந்தன் மீதான படையெடுப்பு நிகழ்த்தப்பட்டது. பரந்தனைக் கைப்பற்றியதையடுத்து, 1996ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி கிளிநொச்சி பட்டினத்தை கைப்பற்றும் நோக்குடன் 'சத்ஜெய 2' என்ற போர் நடவடிக்கையை சிங்கள இராணுவம் முடுக்கிவிட்டது. விடுதலைப் புலிப் போராளிகளின் உக்கிரமான எதிர்த்தாக்குதல் காரணமாக சிங்களப் படையினரால் தமது இராணுவ இலக்கை முழுமையாக அடையமுடியவில்லை. கிளிநொச்சிப் பட்டினத்தின் ஒரு பகுதி மட்டும் இராணுவத்திடம் வீழ்ந்தது. பலநாள்களாகச் சண்டை தொடர்ந்தது. முல்லைத்தீவில் சந்தித்த பேரிழப்புகளுக்குப் பழிவாங்கும் நோக்கத்துடன், சிங்கள ஆயுதப் படைகள் பீரங்கிக் குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்தும், விமானத் தாக்குதல்களை நடத்தியும், கிளிநொச்சி பட்டினத்தையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் தரைமட்டமாக்கின.

(தொடரும்...)




# கைதிகள் விடயம்

# விரைந்த தீர்வு அவசியம்

*பி.மாணிக்கவாசகம்*

அநுராதபுரம் அரசியல் கைதிகளின் அடுத்த கட்டம் சிக்கல்கள் நிறைந்த ஒரு விடயமாகியிருக்கின்றது. இந்தச் சிக்கல்களில் இருந்து விடுபட்டு, எவ்வாறு அவர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பது தெளிவற்றதாகவே உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு யார் தீர்வு காணப் போகின்றார்கள்? யாரிடம் இருந்து தீர்வைப் பெறுவது?- என்பது போன்ற கேள்விகள் இப்போது எழுந்திருக்கின்றன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இராசதுரை திருவருள், மதியழகன் சுலக்ஷன், கணேசன் தர்ஷன் ஆகிய மூன்று அரசியல் கைதிகளும், எட்டு வருடங்களாகச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு எதிரான வழக்குகள் கடந்த நான்கு வருடங்களாக வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுக்கப்பட்டிருந்தன. ஆயினும் அந்த வழக்குகளின் விசாரணைகள் முற்றுப்பெறவில்லை.

நான்கு வருடங்களாக விசாரணை செய்யப்பட்ட இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட சாட்சிகளுக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக நீதிமன்றத்தின் ஊடாக சட்டமா அதிபருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து, இந்த வழக்குகளை அநுராதரபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுமாறு அவர் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவுக்கு அமைவாகவே இந்த வழக்குகள் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

மாவட்ட நீதிமன்றங்கள் அல்லது நீதிவான் நீதிமன்றங்கள் குறுகியதோர் இடப்பரப்பையே தமது நியாயாதிக்க எல்லைகளாகக் கொண்டிருக்கின்றன. ஆனால், மேல் நீதிமன்றத்தைப் பொறுத்தளவில் அத்தகைய வரையறுக்கப்பட்ட நியாயாதிக்க எல்லைப் பரப்புக் கிடையாது.



### சர்வாதிகாரமா?

மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்படுகின்ற ஒரு வழக்கு தொடர்பான சம்பவம் நடைபெற்ற பிரதேசத்தில் உள்ள மேல் நீதிமன்றத்தில்தான் அந்த வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு கிடையாது. காரண, காரியங்களுக்காக வடக்கில் நடைபெற்ற ஒரு சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையை நாட்டின் வேறு ஏதாவது ஒரு பகுதியில் உள்ள ஒரு மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யுமாறு பணிப்புரை விடுப்பதற்கு சட்டமா அதிபருக்கு நீதித்துறை சட்ட விதிகள் அதிகாரமளித்திருக்கின்றன.

அதேபோன்று நாட்டின் கிழக்கு மாகாணத்திலோ அல்லது தென் மாகாணத்திலோ ஏதாவது ஓரிடத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் தொடர்பான மேல் நீதிமன்ற வழக்கு விசாரணையை வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என ஏதாவது ஒரு திசையில் உள்ள ஒரு மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்ய முடியும். அதனைத் தீர்மானிப்பதற்குரிய அதிகாரங்களை சட்டமா அதிபர் கொண்டிருக்கின்றார்.

இந்தச் சட்டரீதியான அதிகாரத்தைப் பயன்படுத்தியே வவுனியாவில் நடைபெற்று வந்த மூன்று அரசியல் கைதிகளின் வழக்குளையும் சட்டமா அதிபர் அநுராதபுரத்திற்கு மாற்றியிருக்கின்றார். உயிரச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட சாட்சிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்ற காரணத்துக்காகவே இந்த நடவடிக்கையை அவர் எடுத்திருக்கின்றார்.

எனவே, சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை சரியானதொரு நடவடிக்கையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருந்தாலும்கூட, சட்டமா அதிபர் இந்த விடயத்தில் ஒரு சர்வாதிகார போக்கிலேயே நடந்து கொண்டிருக்கின்றார் என்பது சட்டத்துறை நிபுணர்களின் கருத்தாகும்.

ஏனெனில் சாட்சிகளின் பாதுகாப்பைக் கவனத்தில் கொள்கின்ற அதேவேளை, வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களாகிய எதிரிகளின் நலன்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்பதும் நீதித்துறையின் சட்டவிதியாகும். சாட்சிகளின் பாதுகாப்புக்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் எதிரிகளின் நலன்களைப் பாதிப்பதற்கு இடமளிக்கப்படக் கூடாது. ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

இது சட்டமா அதிபரின் தவிர்க்க முடியாத பொறுப்பாகும். அநுராதபுரம் அரசியல் கைதிகளின் விடயத்தில் சட்டமா அதிபர் இந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றவில்லை என்பதே அனுபவம் மிக்க சட்டத்தரணிகளின் குற்றச்சாட்டாகும்.

### அரசியல் சார்ந்த விடயம்

அநுராதபுரத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்ற கைதிகள் மூவரும், இராணுவத்தினரைக் கொலை செய்தார்கள் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் 2009 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. அதற்கு முன்னர் பல மாதங்களாகவே அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரவலாக வன்னிப் பிரதேசத்தில் யுத்த மோதல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த மோதல்கள் மிகத் தீவிரமாக இடம்பெற்றிருந்தன. தீவிரமான ஒரு யுத்த காலமாகிய 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விடுதலைப்புலிப் போராளிகளான இந்தக் கைதிகள் மூவரும் இராணுவத்தினரைக் கொலை செய்தார்கள் என்பதே குற்றச்சாட்டு.

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இந்த யுத்தத்தில் இந்த இருதரப்பினருமே எதிரிகளாவர். எதிரிகள் ஒருவரை ஒருவர் வெற்றி கொள்வதற்காகத் தாக்கி அழிப்பதற்காக மேற்கொள்வதே யுத்தமாகும். இத்தகையதொரு சூழலில் இராணுவத்தினரைக் கொலை செய்தார்கள் என்று யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலி உறுப்பினர்களான இந்த மூன்று அரசியல் கைதிகளின் மீதும் குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கின்றது.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாதாரண சூழலில் கொலை செய்யவில்லை. யுத்தத்தில் ஈடுபட்டிருந்த போதே இந்த கொலைச்சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

இந்த நாட்டில் புரையோடியுள்ள இனப்பிரச்சினை காரணமாகவே இங்கு முப்பது வருடங்களாக ஒரு யுத்தம் நீடித்திருந்தது. அந்த வகையில் இது ஓர் அரசியல் பிரச்சினை சார்ந்த விடயமாகும். வெறுமனே, சாதாரண குற்றவியல் சார்ந்த ஒரு விடயமல்ல. இதனாலேயே, அரசியல் காரணங்களுக்காக விசேடமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, இவர்கள் மீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, அந்தச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, இது ஓர் அரசியல் சார்ந்த வழக்கு என்ற நிலையிலும் அணுகப்பட்டிருக்க வேண்டும்.

அரசியல் சார்ந்த விடயங்களுக்காகவே, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், பயங்கரவாதத் தடைச்சட்டம் இப்போது இங்கு நீர்த்துப் போய்விட்டது என்று சர்வதேசத்திடம் அரசாங்கம் கூறினாலும்கூட, அந்தச் சட்டத்தை உறங்கு நிலையில் வைத்துக் கொண்டு தமக்கு வேண்டிய நேரங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் அதனைப் பயன்படுத்தி தமிழர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்ற போக்கு இன்னும் முடிவுக்கு வரவில்லை.

(11 ஆம் பக்கம் பார்க்க...)



# கைதிகள் விடயம்

# விரைந்த தீர்வு அவசியம்

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நிலையில்தான் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களை, அரசியல் கைதிகள் என ஏற்க மறுத்து, அவர்களை அரசாங்கம் பயங்கரவாதிகள் என வலிந்து கூறி வருகின்றது.

**அடிப்படை மனித உரிமை மீறல்**

இந்த மூன்று அரசியல் கைதிகளினதும் விடயத்தில் சாட்சிகளின் பாதுகாப்புக்காக, இவர்களுடைய வழக்குகளை அநுராதபுரத்திற்கு மாற்றும்போது, எதிரிகளின் அடிப்படை உரிமை சார்ந்த நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. வழக்கு விசாரணைகளின் போது, சாட்சிகளின் பாதகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது முக்கியம்.

அதேவேளை எதிரிகளின் அடிப்படை உரிமை பேணப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தபட்டிருக்கின்றது, இந்த வகையில் சாட்சிகளுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பும், குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு நீதியும் வழங்கப்படும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கின்ற அடிப்படை உரிமையும் முறையாகப் பேணப்பட வேண்டிய பொறுப்பு சட்டமா அதிபரைச் சார்ந்திருக்கின்றது. அந்த பொறுப்பு முறையாக நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பிரச்சினை விஸ்வரூபமெடுப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

இந்த விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தமிழர்கள். சிங்கள மொழி தெரியாதவர்கள். இவர்களுடைய வழக்குகள் சிங்களத்தை அரசகரும மொழியாக முழுமையாகப் பயன்படுத்துகின்ற அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றன.

அநுராதபுரத்திற்கு இந்த வழக்குகள் மாற்றப்படுவதை இந்தக் கைதிகள் மூவரும் ஆரம்பத்திலேயே ஆட்சேபித்திருந்தார்கள். அது மட்டுமல்ல. இந்த வழக்குகள் ஏற்கனவே நடைபெற்று வந்ததைப் போன்று வவுனியாவிலேயே நடத்தப்பட வேண்டும் என்று கோரியிருக்கின்றார்கள். புதிதாக வேறிடத்திற்கு மாற்ற வேண்டும் என்பதல்ல அவர்களுடைய வேண்டுகை.

வழக்கு நடைபெற்று வந்த நீதிமன்றத்திலேயே விசாரணைகளை நடத்துங்கள் என்பதே அவர்களுடைய கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து அவர்கள் ஏற்கனவே உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தார்கள். இப்போது வழக் குகள் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட் டிருப்பதனால் அவர்கள் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள்.

இந்த நிலையில், இந்த அரசியல் கைதிகளின் விடயத்தில் இந்த வழக்குகள் அரசியல்சாா்ந்த ஒரு விடயம் என்பது உரிய முறையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அது மட்டுமல்லாமல், எதிரிகளின் மொழியில் அந்த மொழிசார்ந்த சூழலில் வழக்குகள் நடத்தப்பட வேண்டும் என்ற அவர்களுடைய அடிப்படை உரிமையும் மீறப்பட்டிருக்கின்றது.

**உரிமை சார்ந்த கோரிக்கை**

எதிரிகளின் நலன்களுக்காக அவர்களுடைய விருப்பத்தை ஏற்று வழக்குகள் வேறிடங்களுக்கு மாற்றப்படுவது இலங்கை நீதிமன்ற வரலாற்றில் சாதாரண நிகழ்வாகும். பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்றும், பொதுமக்கள் கொல்லப்பட்டமைக்கு இராணுவத்தினரே காரணம் என்றும் அரச படையினர் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்குகள், அந்த வழக்குளின் எதிரிகளாகிய இராணுவத்தினருடைய நலன்களுக்காக தமிழ்ப்பிரதேச நீதிமன்றங்களில் இருந்து அநுராதபுரம், பொலன்னறுவை, கொழும்பு போன்ற நீதிமன்றங்களுக்கு மாற்றப் பட்டிருக்கின்றன. அவ்வாறு மாற்றப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட தமிழர்களான சாட்சிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது எனத் தெரிவித்து வெளியிடப்பட்ட ஆட்சேபனைகள் சட்டமா அதிபரினால் கருத்திற் கொள்ளப்படவில்லை. அங்கு எதிரிகளின் நலன்களும், அவர்களுடைய அடிப்படை உரிமையுமே முதன்மைப்படுத்தப் பட்டிருந்தன. ஆனால் இங்கு தமிழ்க் கைதிகளான எதிரிகளின் நிலைமை புறந்தள்ளப்பட்டிருக்கின்றன.




உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது வழக்குகளை தமிழ்ப் பிரதேசமாகிய வவுனியாவிலேயே விசாரணை செய்யப்பட வேண்டும் என கோருகின்றார்கள். அந்தக் கோரிக்கை நியாயம் சார்ந்தது. நீதியானது.

சட்டத்திற்கு உட்பட்டது, எனவே, அந்தக் கோரிக்கை நீதி முறைமையிலும் சட்ட முறைமையிலும் அதற்கும் மேலாக மனிதாபிமான முறையிலும் கவனத்தில் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மூன்று வாரங்களுக்கு மேலாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்ற கைதிகளின் உடல், உள நிலைமைகள் மோசமடைந்துள்ள நிலையிலும், அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சட்டமா அதிபரோ அல்லது அரசாங்கமோ இன்னுமே முன்வரவில்லை.

ஏற்கனவே நாட்டில் மனித உரிமை நிலைமைகள் சீரடையவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக நீடித்துள்ள நிலையில் இந்த மூன்று அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முடிவு காணாதிருப்பதன் காரணமாக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகளும் பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு நல்லாட்சி அரசாங்கம் ஆளாகியிருக்கின்றது.

இந்த நிலைமையானது, நிலைமாறுகால நீதியை நிலைநாட்டுவதற்கும், நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கேள்விக்குறிக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

சட்டரீதியாகக் கைதிகளாக உள்ள எதிரிகளின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த மறுக்கின்ற அரசாங்கத்தினால் மனித உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் நிலைநாட்டி, நிலைமாறு கால நீதியை நிலைநாட்டி, நல்லிணக்கத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியுமா என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது.

**அடுத்தது என்ன?**

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்ற மூன்று அரசியல் கைதிகளையும் அவர்களுடைய உறவுகள் சென்று நேரடியாகப் பார்வையிட்டிருக்கின்றார்கள். தங்களுடைய பிள்ளைகளின் உடல் நிலை மிகவும் மோசமாக இருக்கின்றது என அவர்கள் கண்ணீரோடும் மனக் கலக்கத்தோடும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினையை வெளியுலகுக்குக் கொண்டு வருவதற்கான ஊடகச் சந்திப்புக்களையும் வேறு முக்கிய சந்திப்புக்களையும் மேற்கொள்வதற்கும் அந்த அன்னையர் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

மறுபுறத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளின் கோரிக்கையை முறையாகச் செவிமடுப்பதற்கு நீதித்துறை தயாராக இல்லை. அவர்களுடைய உடல் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகுவதற்கும் அரசாங்கம் தயராக இல்லை.

இந்த நிலையில் உண்ணா விரதம் இருக்கின்ற கைதிகள் மூவரும் தமது போராட்டத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள். அதேபோன்று அரசாங்கமும், இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதில்லை. எந்த காரணத்தைக் கொண்டும் வவுனியாவில் இருந்து அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட வழக்குகளை வவுனியாவுக்கு மீண்டும் மாற்றுவதில்லை என்பதில் உறுதியாக இருக்கின்றது.

இந்தப் பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட இரு தரப்பினருமே இவ்வாறு விடாப்பிடியாக, விட்டுக் கொடுக்காத நிலையில் இருப்பதனால், இதன் அடுத்த கட்டம் என்ன என்பது சிக்கல் நிறைந்த கேள்வியாக மாறியிருக்கின்றது.

இந்த மூன்று அரசியல் கைதிகளின் விடயத்தை முன்னிலைப்படுத்தியும், அனைத்து அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கறுப்புக்கொடி போராட்டத்தின்போது, போராட்டக்காரர்களை நேரில் சந்தித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என விடுத்த அழைப்பை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் நிராகரித்துவிட்டார்கள். அத்துடன், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்துவதில் பயனில்லை எனத் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்கள்.

அதேவேளை, இந்த விடயம் குறித்து ஜனாதிபதிக்கு நேரடியாகக் கடிதம் எழுதியுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமாகிய இரா.சம்பந்தன் ஒத்திவைப்பு வேளை பிரேரணையின் மூலம் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நாடாளுமன்றத்தில்



வலியுறுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தார். இந்த முயற்சியில் அவர் எந்த அளவுக்கு வெற்றிபெறுவார் என்பது தெரியவில்லை.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல் கைதிகளின் விடயத்தில் உடனடி முடிவு எடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும். அவசரமாக அந்த முடிவு எடுக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் தாமதம் செய்யப் படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் உண்ணாவிரதக் கைதிகளின் உடல் நிலையை மேலும் மேலும் மோசமாக்குகின்ற தருணமாகவே மாறும்.

அசம்பாவித நிலைமையை நோக்கி உண்ணாவிரதக் கைதிகளின் உடல் நிலை வேகமாக நகர்ந்து கொண்டிருக்கின்ற சூழலில், இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண வேண்டியது இப்போதைய அவசரத் தேவையாகும். விதண்டா வாதங்களிலும், விவாதங்களிலும் நேரத்தைச் செலவழிப்பதை விடுத்து, பொறுப்புள்ளவர்கள் தேவையையும் நிலைமையையும் உணர்ந்து உடனடியாகச் செயற்பட முன்வர வேண்டும். ★

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா





**மீண்டும் பெயர் குறிப்பிடாமல், மோடி - அபே அறிக்கை, பாகிஸ்தான் (50 பில்லியன் டொலர் மதிப்புக் கொண்ட சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் மூலமாக) முக்கிய பங்கு வகிக்கும் சீனாவின் இணைப்பு மற்றும் பாதை முன்னெடுப்புத் திட்டத்தைத் தாக்கியது.**

மக்கள் சீனக் குடியரசு, சீனாவுக்கு எதிரான அமெரிக்க இராணுவ மூலோபாயத் தாக்குதலில் புதுடில்லியின் ஒருங்கிணைப்புக்கும், மேலும் இந்திய ஜப்பானிய உறவுகளுக்கு இணையாக, இஸ்லாமாபாத் உடனான வளர்ந்துவரும் அதன் சொந்த மூலோபாயப் பங்காண்மையை வலுப்படுத்துவதன் மூலமாக விடையிறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் பெயர் குறிப்பிடாமல், மோடி - அபே அறிக்கை, பாகிஸ்தான் (50 பில்லியன் டொலர் மதிப்புக்கொண்ட சீனா பாகிஸ்தான் பொருளாதார வழித்தடம் மூலமாக) முக்கிய பங்கு வகிக்கும் சீனாவின் இணைப்பு மற்றும் பாதை முன்னெடுப்புத் திட்டத்தைத் தாக்கியது. ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் இடையிலான மற்றும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதிக்கும் தென்கிழக்கு ஆசிய பகுதிக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்த உள்கட்டமைப்பைக் கட்டமைப்பதில் இந்தியாவும் ஜப்பானும் ஒத்துழைக்கும் என்பதாகவும் இதில் உறுதியளிக்கப்பட்டது. 40 பில்லியன் டொலர் மதிப்பிலான ஆசிய ஆபிரிக்க வளர்ச்சி வழித்தடம் (Asia - Africa Growth Corridor) அமைக்கும் திட்டம் இனிமேல் தான் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட வேண்டும் என்றாலும் கூட இந்தியாவும் ஜப்பானும் அது தொடர்பாகத் தற்போது பணியாற்றி வருகின்றன.






சீனா, பங்களாதேஷ் மற்றும் மியன்மார் எல்லையை ஒட்டிய ஒரு பொருளாதாரப் பின்னடைவு கொண்ட பகுதியான இந்தியாவின் வடகிழக்கில் உள்கட்டமைப்பை உருவாக்க உதவ ஜப்பானுக்கு விடுக்கப்பட்ட இந்தியாவின் அழைப்பு இந்திய - ஜப்பானிய உறவுகளின் வலிமையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்தியா, எண்ணற்ற இந்திய எதிர்ப்பு இனவாதத் தேசியவாத எழுச்சிகளின் தளமாக இருக்கும் சீனாவுடனான அதன் எல்லை மோதலின் மையமாக இருக்கும் மற்றும் நாட்டின் பிற பகுதிகளுடன் குறுகிய வழித்தடங்கள் மூலமாக மட்டுமே இணைக்கப்பட்டு இருக்கும் அதன் வடகிழக்குப் பகுதியை, குறிப்பாக முக்கியமானதாகவும், மூலோபாய ரீதியாகப் பாதிக்கப்படக் கூடியதாகவும் கருதுகிறது.

**அபே - மோடி உச்சி மாநாட்டுக்கு பெய்ஜிங் இன் பிரதிபலிப்பு அமைதியானதாக இருந்தது.**

இந்தியத் திட்டங்கள் தென்கிழக்கு ஆசியாவுடனான அதன் வர்த்தக மற்றும் மூலோபாய உறவுகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கு வடகிழக்குப் பகுதியின் அபிவிருத்தி முக்கியமானதாக இருக்கிறது. வொஷிங்டன், டோக்கியோ இரண்டுமே, தென் சீனக் கடல் மோதலில் எப்போதும் புதுடில்லி ஆழ்ந்து ஈடுபடுவதற்கான அவற்றின் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்தியாவின் ''கிழக்கு நடவடிக்கை'' கொள்கைக்கு ஆதரவளிக்கப் பலமுறை உறுதியளித்துள்ளன. இந்தியாவுடன் ASEAN நாடுகளில் ஏற்கனவே இருக்கும் மலிவு உழைப்பு உற்பத்தி வழிகளை இணைக்க ஜப்பானும் ஆர்வம் கொண்டுள்ளது.

அபே மோடி உச்சிமாநாட்டுக்கு பெய்ஜிங் இன் பிரதிபலிப்பு அமைதியானதாக இருந்தது. பதிலடி ஓசையற்ற தாக்கப்பட்டது. டோக்லாம் நெருக்கடிக்குப் பின்னர் இந்தியாவுடனான உறவுகளை மறுஒழுங்கமைப்புச் செய்ய அது முனைந்து வருகின்ற நிலையிலும், அத்துடன், மிக முக்கியமாக, கொரிய தீபகற்பம் மீதான நெருக்கடியை அமெரிக்கா குழப்புகின்ற சூழலில் அதனிடம் இருந்து வரும் கடுமையான மூலோபாய அழுத்தத்துக்கு உட்படுகின்ற நிலையிலும் இது ஆச்சரியத்துக்கு உட்படுத்தும் விடயமில்லை.

சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹுவா சுனிங், தென்கிழக்கு ஆசியாவுக்கு இந்தியாவின் நுழைவாயிலாக இருக்கும் வடகிழக்கின் அபிவிருத்தியில் ஜப்பானின் உதவியை நாடும் இந்தியாவின் திட்டங்களுக்கு விதிவிலக்கு எடுத்துக்கொண்டார் என்று கூறப்பட்டது. மேலும், ''மூன்றாம் நபர்'' யாரும் ''எந்தவொரு வடிவத்திலும் பிராந்திய இறையாண்மை குறித்த சீனாவுக்கும் இந்தியாவிற்கும் இடையிலான சச்சரவுகளில் தலையிட'' முடியாது என்று ஹுவா தெரிவித்தார்.

**உச்சிமாநாட்டின் சிறப்பம்சமாக, 508 கிலோமீற்றர் மும்பை - அகமதாபத் அதிவேக ரயில் திட்டத்துக்கான கட்டமைப்பைத் தொடங்கக் குஜராத் மாநிலத்தில் உள்ள மோடியின் வீட்டில் வைத்து ஓர் அற்புதமான விழா நடைபெற்றது**

மோடி-அபே உச்சிமாநாட்டின் திட்டநிரலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த நெருக்கமான இராணுவ மூலோபாய உறவுகளை உருவாக்கும் அதேவேளையில், ஜப்பானும் இந்தியாவும் அவர்களது வர்த்தக உறவுகளை உத்வேகத்துடன் ஆரம்பிப்பதில் ஆர்வமாக இருந்தன. இந்தியாவிற்கான ஜப்பானின் ஏற்றுமதி இன்னும் தேக்க நிலையில் உள்ளது என்பதோடு, ஜப்பானுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 2013 - 14 இல் 6.81 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது 2016 - 17 இல் வெறும் 3.85 பில்லியன் டொலராகக் குறைந்து, இவைகள் அண்மைய வருடங்களில் மேலும் நலிந்துவிட்டன.

உச்சிமாநாட்டின் சிறப்பம்சமாக, 508 கிலோமீற்றர் மும்பை - அகமதாபத் அதிவேக ரயில் திட்டத்துக்கான கட்டமைப்பை தொடங்க குஜராத் மாநிலத்தில் உள்ள மோடியின் வீட்டில் வைத்து ஓர் அற்புதமான விழா நடைபெற்றது. இந்தியாவின் முதல் அதிவேக இரயில் பாதையை உருவாக்குவதற்கான சீனாவின் முயற்சியை வெற்றி கொள்ள தீர்மானித்து, ஜப்பான், 50 வருடங்களாக அதன் திட்டத்திற்கான மொத்த செலவு மதிப்பீடான 17 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையில் 80 சதவிகிதத்துக்கும் அதிகமான தொகையை 0.1 சதவிகித சலுகை வட்டி வீதத்துடன் நிதியளிப்பு செய்து வருகிறது.

குஜராத்தில் புதிய மாருதி சுசூகி வாகன தொழிற்சாலையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் சுசூகியின் தலைவர் ஒசாமூ சுசூகியுடன் மோடியும் அபேயும் கலந்துகொண்டனர். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிரூபிக்கும் வகையில் இந்தியா முழுவதும் நிலவுகின்ற மலிவுகூலி உழைப்பு நிலைமைகள் மீதான எந்தவித சவாலையும் இந்திய அரசு இரக்கமின்றி ஒடுக்கும் விதமாக, அரசியல் ஸ்தாபகம், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களும் ஜோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பேரில் 13 மாருதி சுசூகி தொழிலாளர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்து சிறையில் அடைத்துள்ளன. இந்த 13 பேரும், மாருதி சுசூகியின் மானேசர், ஹரியானா கார் அசெம்பிளி ஆலையில் மிகக் குறைந்த ஊதியம் மற்றும் ஆபத்தான




ஒப்பந்தத் தொழிலாளர் வேலைகள் ஆகியவற்றை எதிர்ப்பதில் முன் நின்றனர்.

மோடி மற்றும் அபே இருவரும், சீனாவுக்குப் போட்டியாக இந்தியாவை ஒரு மலிவு உழைப்பு உற்பத்தித் தொடரின் மையமாக உருவாக்க உதவும் ஜப்பானின் மூலதனத்தில் பொருளாதாரப் பங்காண்மையுடனான இந்திய - ஜப்பானிய இராணுவ மூலோபாயக் கூட்டணியைச் சீராக்க ஆர்வமாக உள்ளனர். இந்தியாவின் Economic Times பத்திரிகையின் அண்மையதொரு தலையங்கம், சீனாவில் வழங்கப்படும் கூலியில் ஐந்தில் ஒரு பங்கு தான் இந்திய தொழிலாளர்களின் கூலியாக உள்ளது என்றும், உற்பத்தியில் இந்தியாவை ஒரு உலக சக்தியாக உருவாக்கும் மோடியின் திட்டங்களை உணர்த்துவதற்கான கருவியாகவே இந்த ஊதிய வித்தியாசம் பேணப்பட்டுவருகின்று என்றும் விவாதிக்கின்றது.

(கேள்வி தொடரும்)

# வேண்டும் வரத்தை அள்ளி வழங்கும் கந்தசஷ்டி விரதம்



கலியுகத்தின் தெய்வம் எனப் போற்றப்படும் கந்தப்பெருமானைவேண்டி நோற்கப்படும் கந்த சஷ்டி விரதம் இன்று வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரமும், பிரதமை திதியும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் பக்திபூர்வமாக ஆரம்பமாகின்றது.

இலங்கைத் தீவின் தமிழர்கள் பெரும்பான்மையாகச்செறிந்து வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இந்துக்களில் பெரும்பான்மையினரால் முருகன், பிள்ளையார் ஆலயங்களில் இந்த விரதம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மனம் பொறிகளின் வழி போகாது தடுக்கும் பொருட்டு உணவை சுருக்கியேனும் அல்லது முற்றாக விடுத்தேனும் திரிகரண சுத்தியால் இறைவனைத் தூய அன்பால் வழிபடுவதே இந்த விரதத்தின் சிறப்பாகும். எந்த விரதத்தையாவது விரதம் அனுஷ்டிப்பவர்கள் சங்கற்ப பூர்வமாக முறைப்படி அனுஷ்டிப்பதால் தேக சுத்தி, நோயற்ற வாழ்வு, மனத்தூய்மை, பாவநீக்கம் ஆகிய நிறைந்த நன்மைகள் உண்டாகுமென சைவசமய சிந்தாமணி எனும் நூலில் கவிமணிதேசிக விநாயகம்பிள்ளை மிகத் தெளிவாகக் கூறி உள்ளார்.

புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் இந்துக்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்களில் புரட்டாதிச் சனி விரதம், நவராத்திரி கும்ப விரதம், கேதார நாதரை நோக்கி கௌரி அம்பாள் அனுஷ்டித்த கேதார கௌரி விரதம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

அந்தவகையில், புரட்டாதிச் சனி விரதமும் நவராத்திரி கும்பமகா நவமி விரதமும் நிறைவுற்று கந்தசஷ்டி விரதம் ஆரம்பிக்கின்ற காலமிது. யாமிருக்க பயமேன்? என்று அபயக் கரம் காட்டி, தன்னை வழிபடும் அடியவர்களின் துன்பதுயரங்கள் போக்கிவேண்டுவோர் வேண்டும் வரங்களை அள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கும் அந்த அழகே வடிவான முருகன் தினைப் புனத்திலே வள்ளியைக் கவர்ந்த கள்வன்.

ஐப்பசி மாதம் வளர்பிறைத் திதி பிரதமை முதல் சஷ்டி வரை (முடிய) ஆறு தினங்களும் அனுஷ்டிக்க வேண்டும்.இந்த விரதத்தை 6 வருடங்கள் அல்லது 12 வருடங்கள் அனுஷ்டிப்பது விரத முடிவில் விரத உத்யாபனம்செய்து நிறைவு செய்வதுவே சரியானது என இந்து சமய வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

சஷ்டி திதி அன்று எந்த வித ஆகாரமுமின்றி உபவாசம் இருத்தல் இந்த விரதத்தின் நியதியாகும். ஸ்கந்த பஞ்சமியில் அருந்தி கந்தசஷ்டியில் உபவாசமிருந்து ஸப்தமி திதியில் பாரணை செய்ய வேண்டும். இப்படி முறையாக விரதமிருந்தவர்கள் முருகப் பெருமானின் கருணையைப் பெறுவார்களாளென்பது திண்ணம்.

அந்த வகையில், கந்தசஷ்டி விரதத்தைப் பொறுத்த வரை உபவாசம் இருப்பது உத்தமம். அதனை அனுஷ்டிக்க இயலாதவர்கள் பகல் நீங்கிய பின் முருகப்பெருமானைத்தரிசனம்செய்து இரவில் தீர்த்தம், இளநீர், நீர் ஏதாவது ஒன்றை உட்கொள்ளலாம். பகல் பொழுதைக் கழித்து முருக வழிபாடு செய்து இரவில் ஏதேனும் ஒரு வகைப் பழங்களை குறைவாக அருந்தலாம். இது மத்திமம்.

**கந்தசஷ்டி விரதாரம்பம் இன்று**

இவ்வாறு விரதமனுஷ்டிப்போர் விரதத்துக்கு முதல்நாள் ஒரு பொழுது உணவும், அன்றிரவு சிறிதளவு பலகார வகையும் உண்ணலாம் என சைவ சமய சிந்தாமணி நூல் இந்த விரதத்தின் மகிமை பற்றித் தெளிவாகக் கூறுகின்றது. விரத காலங்கள் தவக்காலமாக நோற்கப்படுவது மிக முக்கியமாகும்.

கந்தப் பெருமானது மகிமையை எடுத்துக் கூறும் கந்தபுராணப் படிப்பு அதற்குப் பயன் சொல்லும் நிகழ்வும் இந்த விரத காலங்களில் முருகன் கோவில்களில் இடம்பெறுவது இவ் விரதத்தின் சிறப்பு அம்சமாகும். வள்ளியெம் பிராட்டியாரை தினைப் புனத்தின் கண்ணே கவர்ந்த அந்த அழகே வடிவான முருகனை இந்தக் கந்தசஷ்டி விரத நன்னாளிலே வணங்கி இந்த விரதத்தை அனுஷ்டிக்கும் இந்து மக்கள் அனைவரும் மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவித்து இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து, சகல சௌபாக்கியங்களையும் பெற்றுச் சீரும் சிறப்புடன் வாழ அந்தக் கடவுள் அருள் பாலிப்பாராக.

- சங்கீத கலா வித்தகர் -
திருமதி மலர்விழி கனகசபை

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து

## ரயில்வே ஊழியர்கள் நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பு!



கொழும்பு, ஒக். 20

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று நள்ளிரவு முதல் வேலைநிறுத்தப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ரயில்வே சாரதிகள் சங்கம் தெரிவித் துள்ளது.


பணிக்கு இணைத்தல், சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு இதுவரை தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவில்லை எனவும், புதிய பயிலுநர் சாரதிகளை சேவையில் உள்ளீர்த்துக் கொண்டசெயற்பாட்டில் விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன எனவும் தெரிவித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதாக அந்தச் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இன்று நள்ளிரவு முதல் ரயில்வே சாரதிகள், பாதுகாவலர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் கட்டுப்பாட்டாளர்கள் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

கடந்த வாரம் தாம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்காததையடுத்தே இந்த போராட்டம் மேற்கொள்ளவுள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரம் இந்தத் தொழிற்சங்கம் மேற்கொண்ட போராட்டம் காரணமாக பொதுமக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விசேட அனர்த்த முகாமைத்துவ செயற்பாடு மத்திய நிலையம் அமைக்க நடவடிக்கை!




உமா ஓயா செயற்றிட்டம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்காக விசேட முகாமைத்துவ அனர்த்த திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக விசேட அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டு மத்திய நிலையம் ஒன்றை பண்டாரவளை நகரை அண்டிய பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் எனும் ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையின் போது உமா ஓயா நீர்த்தேக்கத்தில் ஏற்படும் நீர்க்கசிவு காரணமாக பாதிக்கப்படும் பிரதேசங்கள் விசேடமாக முகாமைப்படுத்தலுக்கு உட்படுத்தவேண்டியது அவசியம் என இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மன்னாரில் சிறைக்கூடம்; அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஒக். 20

மன்னாரில் சிறைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மன்னாரில் சிறைக்கூடம் ஒன்றை அமைப்பதற்கான பத்திரத்தை அமைச்சர் சுவாமிநாதன் சமர்ப்பித்திருந்தார்.

வவுனியா சிறைச்சாலையில் இருந்து 85 கி.மீ தொலைவில் உள்ள மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேகநபர்கள், தற்காலிகமாக, சுங்கத் திணைக்கள அறை ஒன்றிலேயே தற்போது தடுத்து வைக்கப்படுகின்றனர். அதில் போதிய வசதிகள் கிடையா.

இதனைக் கருத்தில் கொண்டு, உப்புக்குளம் தெற்கு கிராம அதிகாரி பிரிவில், புதிய சிறைக் கூடம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்ற வளாகத்துக்கு அண்மையாக இந்த சிறைக்கூடம் அமைக்கப்படவுள்ளது.

# தலைமைக் கழகத்தில் இருந்து துரோகிகளை வெளியேற்றுவோம்

சென்னை,ஒக்.20

துரோகக் கும்பலையும், சுயநலக் கூட்டத்தையும் தலைமைக் கழகத்தில் இருந்து சட்ட ரீதியாகவே வெளியேற்றுவோம் என்று டி.டிவி.தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. அம்மா அணி துணை பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியவை வருமாறு:-

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 46ஆவது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு வருகிற 24ஆம் திகதி கழக நிறுவனத் தலைவர் எம்.ஜி.ஆர். வாழ்ந்த ராமாவரம் தோட்டத்தின் நுழைவு வாயிலில் உள்ள கழகக் கொடி ஏற்றிவைக்கப்படும். தொடர்ந்து டாக்டர் எம்.ஜி. ஆர். பேச்சு மற்றும் காதுகேளாதோர் மேல் நிலைப் பாடசாலையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, கழகத்தின் 46 ஆவது ஆண்டு தொடக்க நாள் விழா சிறப்பு மலர் வெளியிடப்படும்.

இந்த நிகழ்ச்சியில் தலைமைக் கழக நிர்வாகிகளும், உள்ளூராட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகளும், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் சுயநலனுக்காகக் கரம் கோத்துக் கொண்ட துரோகக் கும்பல் இன்று தலைமைக் கழகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு நடத்துகின்ற நிகழ்வுகள், கோடான கோடி தொண்டர்களுக்கு மன வேதனையை அளித்துள்ளது.

எனினும் பகையை, துரோகத்தை பந்தாடும் பாங்கினை புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித்தலைவி அம்மா ஆகியோரது வழியில் சின்னம்மாவின் வழிகாட்டுதலோடு வென்று காட்டுவோம். விரைவில் இந்தத் துரோகக் கும்பலையும், சுயநலக் கூட்டத்தையும் சட்ட ரீதியாகவே தலைமை கழகத்தில் இருந்து வெளியேற்றிக் காட்டுவோம்.

'துரோகம்' என்கின்ற தற்போதைய களங்கத்தைத் துடைத்தெறிந்து விட்டு, அடுத்த ஆண்டு நடைபெற உள்ள கழகத்தின் துவக்க விழாவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் என்கிற நமது அடையாளத்தோடு, நம் தலைமைக் கழகத்தில் எழுச்சியோடு கொண்டாடுவோம்.

புரட்சித்தலைவர் கண்ட கனவுகளை நிறைவேற்றியவர் புரட்சித்தலைவி அம்மா, எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்களுக்காகவே இயங்கும் என்று புரட்சித் தலைவி அம்மா அன்று சொன்னார்கள். நாம் அனைவரும் இந்த தீர்க்க தரிசன வார்த்தைகளுக்கு வடிவமாய்த் திகழ்ந்திடுவோம், ஒன்றுபட்டுப் பணியாற்றிடுவோம் என்று இந்த நாளில் சூளுரை ஏற்போம் என்று தெரிவித்துள்ளார்.



சூளுரைக்கும் தினகரன்

## தாஜ்மஹால் இந்துக் கோவிலாம்!

### பாரதீய ஜனதா எம்.பி கூறுகிறார்

அயோத்தியா, ஒக்.20

தாஜ்மஹால் துரோகிகளால் கட்டப்பட்டது என்ற உத்தரப்பிரதேச சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருந்த நிலையில், ஆளும் பாரதீய ஜனதா கட்சி எம்.பி. ஒருவர் தாஜ்மஹால் ஓர் இந்துக் கோவில் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக அதிசயங்களில் ஒன்று தாஜ்மஹால். உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையில் இது அமைந்துள்ளது. தாஜ்மஹாலை பாரதீய ஜனதா தலைவர்கள் அடுத்தடுத்து விமர்சித்து வருகிறார்கள். முதலில் அதனை உத்தர பிரதேச மாநில சுற்றுலா கையேட்டில் இருந்து மாநில பாரதீய ஜனதா அரசு நீக்கியது.

அதையடுத்து பாரதீய ஜனதா எம்.எல். ஏயான சங்கீத் சாம் கூறும்போது, தாஜ்மஹாலுக்கு இந்திய வரலாற்றில் இடம் அளிக்கக் கூடாது. அது துரோகிகளால் கட்டப்பட்டது. அது இந்திய வரலாற்றின் களங்கம் என்று தெரிவித்து இருந்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. இதற்கு உத்தர பிரதேச முதல் மந்திரி யோகி ஆதித்ய நாத் பதில் அளிக்கும்போது, தாஜ் மஹாலைப் பாதுகாக்கும் பொறுப்பு மாநில அரசுக்கு உண்டு. அது இந்தியர்களின் இரத்தத்தாலும், வியர்வையாலும் கட்டப்பட்டது என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், தாஜ்மஹால் ஓர் இந்துக் கோவில் என்று பாரதீய ஜனதா எம்.பி. வினயகட்டியார் கருத்துத் தெரிவித்து உள்ளார். இது மீண்டும் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

இதுகுறித்து எம்.பி. வினயகட்டியார் கூறியவை வறுமாறு:-

தாஜ்மஹல் ஓர் இந்துக் கோவிலாக இருந்தது. அங்கு சிவன் கோவிலுக்கான அடையாளங்கள் இருந்தன. தேஜோ மஹால் என்று முன்பு அது அழைக்கப்பட்டு இருந்தது. கோபுரத்தில் இருந்து சிவலிங்கத்தின் மீது தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழும் வகையில் கட்டப்பட்டு இருந்தது. இதை அவர்கள் அகற்றி விட்டனர். - என்றார். (உ)

## விரைவில் நாட்டின் பெயரைக் கூட பா.ஜ.கவினர் மாற்றிவிடுவார்கள்

கொல்கத்தா,ஒக்.20

நாட்டின் பெயரைக் கூட பா.ஜ.கவினர் நமக்குத் தெரியாமல் மாற்றிவிடுவார்கள் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடுமையாக விமர்சித்துள்ளார்.

மேற்குவங்க மாநில முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார். அப்போது உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹால் குறித்து பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. சங்கீத் சோம் தெரிவித்த கருத்து குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அளித்த பதிலில் மம்தா பானர்ஜி கூறியவை வருமாறு:-

இது பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் கொள்கை. தற்போது அது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஒரு நாட்டின் நினைவுச் சின்னத்தை எப்படி மதத்தின் பெயரால் அந்த நாட்டின் வரலாற்றில் இருந்து பிரிக்க முடியும். மிகவும் தவறான பாதையில் பா.ஜ.க பயணிக்கிறது. இங்கு நடப்பது சர்வாதிகார ஆட்சி. பலதரப்பட்ட மக்கள் தங்கள் வேற்றுமைகளைக் கடந்து ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நாட்டில் தற்போது இந்தக் கருத்து தேவையற்றது. இது போன்று கருத்து தெரிவிப்பவர்களை நாம் விலக்கி வைக்கவேண்டும்.

பா.ஜ.கவினரை பற்றி குறைவாக பேசுவதே நல்லது. அவர்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஏதாவது செய்வார்கள் என்று பார்த்தால் அதற்குப் பதிலாக பிரச்சினையை தூண்டும் வகையில் நடந்துகொள்கின்றனர். வரலாற்றை மாற்றி எழுதுவதாக கூடிய விரைவில் நமக்குத் தெரியாமல் நமது நாட்டின் பெயரைக் கூட பா.ஜ.கவினர் மாற்றிவிடுவார்கள் என்று மம்தா தெரிவித்துள்ளார்.



மம்தா பானர்ஜி தெரிவிப்பு

## வடகிழக்கு மாநிலங்களில் நாய்க்கறிக்கு வந்த மவுசு

### விலங்கு நல ஆர்வலர்கள் கண்டனம்

கவுகாத்தி,ஒக்.20

அசாம்-மிசோரம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் நாய்க் கறிக்கு நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது. நாய்கள் இறைச்சிக்காக கடத்தப்படுவதற்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சீனாவில் நாய்க்கறி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. அங்கு நாய்க்கறி திருவிழா நடைபெறும் நாளன்று ஆயிரக் கணக்கான நாய்கள் கொல்லப்படுகின்றன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அங்கு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

அதேபோன்ற நிலை இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான அசாம், மிசோரம், திரிபுரா, நாகலாந்து உள்ளிட்ட மாநிலங்களில் நடைபெறுகிறது. இங்கும் நாய்க்கறி விற்பனை நடந்து வருகின்றது.

அதற்காக ஏராளமான நாய்கள் கடத்திச் செல்லப்படுகின்றன. கடந்த சில நாள்களுக்கு முன்பு மிசோரம் மாநிலத்துக்கு மினி லொறியில் கடத்திச் செல்லப்பட்ட 17 நாய்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

இறைச்சிக்காக நாய்கள் கொல்லப்படுவது சட்டப்படி குற்றம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவுக்கு போர் அச்சுறுத்தல் விடுப்பது மிகவும் அபாயகரமானது




சியோல்,ஒக்.20

வடகொரியாவுக்கு போர் அச்சுறுத்தல் விடுப்பது அபாயகரமானது மற்றும் குறுகிய பார்வை கொண்டது என்று ஹிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி ஆயுத பரிசோதனைகளில் ஈடுபட்டு வரும் வடகொரியாவின் நடவடிக்கையால் அமெரிக்கா- வட கொரியா இடையே மோதல் நிலை ஏற்பட்டு வருகின்றது.

கடந்த மாதம் 3ஆம் திகதி வடகொரியா நடத்திய 6 ஆவது மற்றும் மிகப்பெரிய அணு ஆயுத சோதனையும், ஜப்பானுக்கு மேலே ஏவுகணை பறக்க விட்ட சம்பவமும் சமீப காலமாக அங்கு போர்ப் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

வடகொரியாவின் இத்தகையை அச்சுறுத்தலுக்கு பதிலடிகொடுக்கும்வகையில் தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்க கடற்படைப் பயிற்சியை தொடங்கியுள்ளது. கொரிய தீபகற்பத்தின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்பகுதியில் நடைபெறும் இந்தப் பயிற்சி இன்றுடன் முடிவுக்கு வருகின்றது.

இந்த நிலையில் ஆத்திரம் அடைந்த வடகொரியா, அணு ஆயுத போர் எந்த நேரத்திலும் வெடிக்கலாம் என்று எச்சரித்தது. வடகொரியாவின் ஐ.நா. துணை தூதர் கிம் இன் ராயோங் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.


வடகொரியாவின் செயற்பாடுகள் அமெரிக்காவுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தின. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும், வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன்னும் அடிக்கடி ஒருவரை ஒருவர் கடுமையான வார்த்தைகளால் விமர்சித்துக்கொண்டனர். இந்த மோதல் போக்குக் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பரபரப்பான இந்தச் சூழலில், தென்கொரியா தலைநகர் சியோலில் நடைபெற்ற மாநாடு ஒன்றில், அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதிவேட்பாளருமானஹிலாரி கிளிண்டன் பங்கேற்றுப் பேசினார். அப்போது, அவர் கூறியவை வருமாறு–

வடகொரியா விவகாரத்தில் நாம் போரை நாடுவதாலும், ஆக்ரோஷமாக இருப்பதாலும் எந்தப் பயனும் இல்லை. அந்நாட்டுக்கு போர் அச்சுறுத்தல் விடுப்பது அபாயகரமானது.

குறுகிய பார்வை கொண்டது. வடகொரியா மீதான தடையை தீவிரமாக அமுல்படுத்த சீனா தனது பங்களிப்பை அதிகரிக்கவேண்டும் - என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மான் புக்கர் பரிசு வென்ற இரண்டாவது அமெரிக்கர்



லண்டன்,ஒக்.20

லிங்கன் இன் த பார்டோ என்ற புத்தகத்துக்காக 2017ஆம் ஆண்டிற்கான மான் புக்கர் பரிசை அமெரிக்காவைச் சேர்ந்த ஜோர்ஜ் சாண்டர்ஸ் வென்றுள்ளார்.

உலக அளவில் இலக்கியத்திற்காக வழங்கப்படும் மிக உயர்ந்த விருது மான் புக்கர் பரிசு. இந்த விருது கடந்த 1969ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த மான் புக்கர் விருதை இயன் மெக் ஈவன், ஐரிஸ் முர்டோச், சல்மான் ருஷ்டி உட்படப் பல புகழ்பெற்ற எழுத்தாளர்கள் பெற்றுள்ளனர்.இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான மான் புக்கர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. லிங்கன் இன் தி பார்டோ என்ற புத்தகத்தை எழுதிய அமெரிக்கரான ஜோர்ஜ் சாண்டர்சுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகத்தில் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஆப்ரகாம் லிங்கன் மற்றும் அவரது 11 வயது மகன் இறப்பு பற்றியும், அமெரிக்காவின் போர்கள் பற்றியும் சாண்டர்ஸ் விரிவாக எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக நிர்வாகிகள் கூறுகையில், மேன் புக்கர் விருதுக்காக மொத்தம் 144 நாவல்கள் பெறப்பட்டன. அதிலிருந்து ஜோர்ஜ் சாண்டர்ஸ் எழுதிய இந்தப் புத்தகத்தை தேர்வுக் குழுவினர் சிறப்பானதாக தேர்வு செய் துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே கடந்த ஆண்டும் பால் பீட்டி என்ற அமெரிக்கர் மான் புக்கர் பரிசை வென்றமை குறிப்பிடத்தக்கது.

### 27 ஆண்டுகளுக்குப் பின்

## ஈராக்கிற்கு நேரடி விமான சேவைகள் ஆரம்பித்தது சவுதி விமான நிறுவனம்




ரியாத்,ஒக்.20

சவுதி அரேபியாவின் பிளைனாஸ் விமான நிறுவனம், 27 ஆண்டுகளுக்குப் பின் முதல் முறையாக ஈராக்கிற்கு நேரடி விமான சேவையை வழங்கியுள்ளது.

ஈராக் அதிபர் சதாம் உசைன் 1990 ஆம் ஆண்டு குவைத் மீது படையெடுத்ததைத் தொடர்ந்து ஈராக் உடனான விமான சேவைகளை சவுதி அரேபியா நிறுத்திக் கொண்டது.

தற்போது அரபு பிராந்தியத்தில் ஈரானின் செல்வாக்கு அதிகரித்து வருவதைத் தடுக்கும் நோக்கில், ஈராக்குடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துக் கொள்ள சவுதி அரேபியா விரும்புகிறது.

இதற்கான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஷியா மதகுரு உள்ளிட்ட ஈராக் உயர் தலைவர்கள் சிலர் சவுதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டனர் ஈது அங்கு நல்ல சூழலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இரு நாட்டு உறவுகளும் துளிர்விடத் தொடங்கியதைப் பிரதிபலிக்கும் வகையில் சவுதி அரேபியாவின் பட்ஜெட் விமான சேவை நிறுவனமான பிளைனாஸ், ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு நேரடி விமான சேவையைத் தொடங்கியுள்ளது.

27 ஆண்டு இடைவெளிக்குப் பின் பாக்தாத் செல்லும் முதல் விமானம் புறப்பட்டதும் இந்தத் தகவலை டுவிட்டரில் பதிவு செய்துள்ளது பிளைனாஸ் விமான நிறுவனம்.

இதற்கிடையே 1990இல் மூடப்பட்ட அரார் பகுதியில் உள்ள தரைவழி எல்லையை மீண்டும் திறக்கவும் சவுதி அரேபியா திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## பாகிஸ்தானில் 25 இந்திய மீனவர் கைது



இஸ்லாமாபாத்,ஒக்.20

பாகிஸ்தான் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்தனர் என இந்தியாவைச் சேர்ந்த 25 மீனவர்களை அந்த நாட்டுக் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

அரபுக் கடலில் பாகிஸ்தான் எல்லைக்குட்பட்ட பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 25 இந்திய மீனவர்களை கடந்த 96 மணி நேரத்தில் பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

அவர்களுக்குச் சொந்தமான 4 படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அந்நாட்டின் கடலோரக் காவல் படை அதிகாரி பர்ஹட் கான் தெரிவித்துள்ளார்.

இவர்களையும் சேர்த்து இந்த ஆண்டில் மட்டும் பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை சுமார் 350 ஆக உயர்ந்துள்ளது.

(ப)

# கொழும்பு றோயலை வீழ்த்தியது

# யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் கொழும்பு றோயல் கல்லூரி அணியை 10 ஓட்டங்களால் வீழ்த்தி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணி.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயதிற்குட்பட்டோருக்கான பிரிவு 2இன் , குழு ஈ அணிகளுக்கான ஒரு போட்டியாக இவ்விரு அணிகளும் மோதிய இந்த ஆட்டம் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு றோயல் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி வீரர்களின் விக்கெட்டுக்களை றோயலின் பந்து வீச்சாளர்கள் விரைவாகத் தகர்த்தெறிந்தனர்.

உதிரிகளாக பெற்ற 17 ஓட்டங்கள், 10ஆம் இலக்க வீரர் அபிலக்சனின் 16 ஓட்டங்கள், அணித் தலைவர் யதுசனின் 12 ஓட்டங்கள் என்பவற்றுடன் 29.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்த சென். ஜோன்ஸ் அணியினர் முதல் இன்னிங்ஸிக்காக வெறுமனே 65 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.




பந்து வீச்சில் இடதுகை பந்து வீச்சாளர் மஞ்சுள பெரேரா 13 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், வலது கை வேகப்பந்து வீச்சாளர் கவிந்து பத்திரன 17 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

பின்னர் தமது முதல் இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாட ஆரம்பித்த றோயல் கல்லூரியின் ஆரம்ப விக்கெட்டுகள் விரைவாக வீழ்த்தப்பட்டன. 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்கள் என்ற நிலையில் றோயல் கல்லூரி காணப்பட்டது. 5ஆவது விக்கெட்டிற்காக இணைந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கஜான் திஸ்ஸநாயக்க மற்றும் கவிந்து சத்துரங்க ஆகியோர் அரைச்சத இணைப்பாட்டதை பெற்றிருந்த வேளையில் கவிந்து சத்துரங்க 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்த ஓவரிலேயே கஜான் திஸாநாயக்க 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, றோயல் கல்லூரியின் ஓட்ட எண்ணிக்கை கட்டுப்படுத்தப் பட்டது. தொடர்ந்து வந்த வீரர்கள் ஒற்றையிலக்கத்தில் ஆட்டமிழக்க, உதிரிகளாக 19 ஓட்டங்களைப் பெற்ற றோயல் கல்லூரி அணி 33.2 ஓவர்களில் 111 ஓட்டங்களைப் பெற்று 46 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

மீள வேண்டிய கட்டாயத்துடன் இரண்டாவது இன்னிங்ஸினை ஆரம்பித்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் ஒரு முனையில் சரிக்கப்பட்ட போதும், மறுமுனையில் சரோபன் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

68 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 6ஆவது விக்கெட்டிற்காக யதுசன் மற்றும் அபினாஷ் பெற்றுக் கொடுத்த அரைச்சத இணைப்பாட்டத்துடன் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது.

அந்த அணிக்காக 9ஆவது இலக்கத்தில் களம்புகுந்த கபில்ராஜ் 12 பந்துகளில் 4 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 30 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றுக் கொடுத்தார். அவற்றின் நிறைவில் யாழ் தரப்பினர் 34.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் 3.3 ஓவர்கள் வீசிய கமில் மிஸ்ஸிற 23 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். தரு சறுக்ஷான் 43 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அதனைத் தொடர்ந்து 117 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களம்புகுந்த றோயல் கல்லூரி முதல் இரண்டு விக்கெட்டுகளையும் 25 ஓட்டங்களுக்கு இழந்திருந்தது.

எகன் சச்சித்த 28 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். கவிந்து சத்துரங்க ஒரு முனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாட, மறுமுனையில் அபினாஷ், கபில்ராஜ், யதுசன் இணை விக்கெட்டுக்களைப் கைப்பற்றினர்.

கவிந்து சச்சித 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து 8ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார். அடுத்த இரண்டு விக்கெட்டுக்களும் அபினாஷின் பந்துவீச்சில் விரைவாக வீழ்த்தப்பட அந்த அணி 107 ஓட்டங்களில் சுருண்டது. சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 10 ஓட்டங்களால் வரலாற்று வெற்றி பெற்று தொடரினை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.

(ப)

# லாகூருக்கு பலம்வாய்ந்த அணி தெரிவு செய்யப்படும்

## இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நம்பிக்கை

பாகிஸ்தானுக்கு எதிராக லாகூரில் நடைபெறவுள்ள மூன்றாவதும் கடைசியுமான சர்வதேச இருபது -20 கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு பலம்வாய்ந்த அணி தெரிவு செய்யப்படும் என கிரிக்கெட் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இதனை முன்னிட்டு ஏற்கனவே 22 வீரர்களைக் கொண்ட முன்னோடிக் குழாமை தெரிவுக்குழுவினர் நேற்று முன்தினம் பெயரிட்டனர். இறுதி 15 வீரர்களைக் கொண்ட குழாம் இன்று அறிவிக்கப்படும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவன ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பாகிஸ்தானின் லாகூரில் 2009ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பயணித்த பஸ் வண்டி மீது பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோக தாக்குதலின் பின்னர் பாகிஸ்தானில் இலங்கை விளையாடவிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பாகிஸ்தான் செல்வதற்கு வீரர்கள் தயக்கம் காட்டியபோதிலும் அணி ஒன்று பாகிஸ்தான் அனுப்பி வைக்கப்படும் என்பதை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் கடந்த திங்களன்று உறுதி செய்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, பாகிஸ்தான் அரசு ஆகியன உயிர்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கியுள்ள போதிலும் வீரர்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் வீரர்களை 24 மணித்தியாலங்கள் மாத்திரம் பாகிஸ்தானில் தங்கவைப்பதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் ஆலோசித்து வருகின்றது.

இது இவ்வாறிருக்க இலங்கை வீரர்களுடன் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபாலவும் லாகூருக்கு செல்வார் என நிறுவனத்தின் ஊடகப் பிரிவு திங்கள் என்று அறிவித்தது.மேலும் பாகிஸ்தானுக்கு பயணமான உலக அணிக்கு வழங்கப்பட்ட அதே அளவு உயர் பாதுகாப்பு வழங்கப்படும் என இலங்கை வீரர்களுக்கு உறுதி வழங்கப் பட்டுள்ளதுடன் மத்தியஸ்தர்களை பாகிஸ்தான் அனுப்புவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையும் விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அமைதியின்மை நிலவியதால் ஆஸ்திரேலியாவும் மேற்கிந்தியத் தீவுகளும் 1996 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இலங்கைக்கு வரமுடியாது என அறிவித்த சொற்ப தினங்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் கூட்டு அணியாக விளையாடி இலங்கையில் கிரிக்கெட் வீரர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்பதை உறுதிப் படுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(ப)

# இலகு வெற்றியுடன் இலங்கையுடனான ஒரு நாள் தொடர் பாகிஸ்தான் வசம்




இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள்தொடரின்மூன்றாவது போட்டியில் 7 விக்கெட்டுகளால் இலங்கையை வீழ்த்தியிருக்கும் பாகிஸ்தான் ஐந்து போட்டிகள் கொண்ட தொடரையும் 3:0 எனக் கைப்பற்றியுள்ளது.

அபுதாபியில் ஆரம்பமாகிய இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணியின் தலைவர் உப்புல் தரங்க முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்திருந்தார்.

இறுதியாக தாம் விளையாடிய ஒன்பது ஒரு நாள் போட்டிகளிலும் இலங்கை அணி தோல்வியைத் தழுவியிருந்தது. ஐந்து போட்டிகள் கொண்ட தொடரிலும் பாகிஸ்தான் 2:0 என முன்னிலை வகிப்பதால் தொடரில் உயிர்ப்பாக இருக்க இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற வேண்டிய நிலையில் இலங்கை களமிறங்கியிருந்தது.

போட்டியில் இலங்கை அணியில் இருந்து குசல் மெண்டிஸ் மற்றும் சுரங்க லக்மால் ஆகியோர் விடுவிக்கப்பட்டிருந்தமையோடு அவர்களுக்கு பதிலாக சாமர கப்புகெதர மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் அணியில் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

மறுமுனையில் பாகிஸ்தான் அணியில் அஹ்மட் ஷேசாத், இமாத் வஸீம் ஆகியோருக்கு பதிலாக பாஹிம் அஷ்ரப் மற்றும் அறிமுக வீரர் இமாம் உல் ஹக் ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து போட்டியின் துடுப்பாட்டத்தை அணித் தலைவர் உப்புல் தரங்க மற்றும் நிரோஷன் திக்வெல்ல ஆகியோருடன் இலங்கைஆரம்பித்தது. இலங்கை அணிக்கு நல்லதொரு தொடக்கத்தை திக்வெல்ல மற்றும் தரங்கஆகியோர்பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கை அணி 59 ஓட்டங்களைக் குவித்திருந்த வேளையில் நிரோஷன் திக்வெல்ல முதல் விக்கெட்டாக 18 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனையடுத்து களம் நுழைந்த தினேஷ் சந்திமால் அணித் தலைவர் உப்புல் தரங்க ஆகியோர் இணைந்து இரண்டாம் விக்கெட்டுக்காக மந்த கதியில் இணைப்பாட்டம் ஒன்றைக் கட்டியெழுப்பினர். 43 ஓட்டங்கள் வரையில் நீடித்த இந்த இணைப்பாட்டம் சந்திமாலின் விக்கெட்டுடன் முடிவுக்கு வந்தது. சதாப் கானின் சுழலினால் வீழ்த்தப்பட்ட சந்திமால் 49 பந்துகளுக்கு முகம் கொடுத்து வெறும் 19 ஓட்டங்களை மாத்திரம் பெற்று மோசமான இன்னிங்ஸ் ஒன்றை இத்தொடரில் மீண்டும் வெளிப்படுத்தியிருந்தார்.



இதனையடுத்து அரைச்சதம் கடந்து இலங்கையை பலப்படுத்தி களத்தில் நின்ற அணித் தலைவர் உப்புல் தரங்கவும் சதாப்கானினால் வீழ்த்தப்பட்டார். ஆட்டமிழந்த தரங்க தனது 35 ஆவது ஒரு நாள் அரைச் சதத்துடன் மொத்தமாக 80 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 61 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

தரங்கவைத் தொடர்ந்து இலங்கையின் மத்திய வரிசை வீரர்களில் லஹிரு திரிமன்ன (28) தவிர்ந்த ஏனையோர் எதிர்பார்த்த ஆட்டத்தைக் காட்டியிருக்கவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் 166 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து இலங்கை அணி தடுமாறியது.

எனினும் போராட்டத்தைக் காட்டிய திசர பெரேராவினால் 48.2 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 208 ஓட்டங்களைக் குவித்துக் கொண்டது.

இலங்கை அணி சார்பாக பின் வரிசையில் சிறப்பாகச் செயற்பட்ட திசர பெரேரா 37 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக மொத்தமாக 38 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பாகிஸ்தான் அணி சார்பாக பந்து வீச்சில், ஹசன் அலி மொத்தமாக 34 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக்கைப்பற்றிஒருநாள்போட்டிகளில் தனது சிறந்த பந்து வீச்சைப் பதிவு செய்திருந்தார். அத்தோடு சதாப்கான் 2 விக்கெட்டுகளை சாய்த்திருந்தார்.

தொடர்ந்து போட்டியின் வெற்றி இலக்கான 209 ஓட்டங்களை 50 ஓவர்களில் பெற பதிலுக்குத் துடுப்பாடிய பாகிஸ்தான் அணியில் பொறுப்பாக ஆடிய அறிமுக வீரர் இமாம் உல் ஹக் தனது கன்னி ஒரு நாள் சதத்தை பூர்த்தி செய்து தனது தரப்பை வலுப்படுத்தினார்.

இவரின் இந்த சதத்தின் உதவியோடு பாகிஸ்தான் வெற்றி இலக்கை 42.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 209 ஓட்டங்களை அடைந்தது.

பாகிஸ்தான் அணியை வெற்றிப் பாதைக்கு வழிநடத்திய வெறும் 21 வயதேயான இமாம் உல் ஹக் 125 பந்துகளில் 2 சிக்ஸர்கள் மற்றும் 5 பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அத்தோடு இவருக்கு உதவியாக இருந்த மொஹமட் ஹபீஸ் 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது நின்றிருந்தார்.

இந்த வருடத்தில் தொடர்ச்சியாக மூன்றாவது ஒரு நாள் தொடரையும் பறிகொடுத்து ஒரு நாள் போட்டிகளிலும் தமது தொடர்ச்சியான பத்தாவது தோல்வியையும் பதிவு செய்திருக்கும் இலங்கை அணியின் பந்துவீச்சில் திசர பெரேரா, ஜெப்ரி வன்டர்சேய் மற்றும் லஹிரு கமகே ஆகிய வீரர்கள் தலா ஒரு விக்கெட் வீதம் கைப்பற்றியிருந்தனர்.

போட்டியின் ஆட்ட நாயகன் விருது தனது கன்னிப் போட்டியில் சதம் கடந்த இமாம் உல் ஹக்குக்கு வழங்கப்பட்டது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்காவது ஆட்டம் இன்று சார்ஜா நகரில் ஆரம்பமாகின்றது. (ப)

# லாகூரில் விளையாடுவதை இலங்கை கிரிக்கெட் சபை உறுதிசெய்தது




லாகூரில் நடைபெறவுள்ள மூன்றாவது சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு இலங்கை அணி அங்கு செல்லும் என்பதை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உறுதி செய்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக நடைபெற்ற நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் பேசிய பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இப் போட்டியை நடுநிலையான மைதானத்திற்கு மாற்றுமாறு எழுத்து மூலம் கோரிய இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அங்கு செல்ல தயக்கம் காட்டிய இரண்டு தினங்களில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இந்தத் தீர்மானத்தை நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

லாகூரில் நடைபெறவுள்ள சர்வதேச இருபது-20கிரிக்கெட் போட்டியிலிருந்து இலங்கையின் இருவகை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களின் அணித் தலைவர் உப்புல் தரங்க விளையாட மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு எதிரான சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடருக்கான இறுதி குழாம் இன்று அறிவிக்கப்படவுள்ளது. இலங்கை அரசு, பாகிஸ்தான் அரசு, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, சுயாதீன பாதுகாப்பு நிபுணர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தானில் கடந்த இரண்டு மாதங்களாக உயிர்ப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த ஆய்வுகளை நடத்தி வந்தன என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டது. இந்த ஆய்வு அறிக்கைகளை பரிசீலித்த பின்னர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியினருடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் திலங்க சுமதிபாலவும் லாகூர் செல்வார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான இருபது-20 போட்டித் தொடருக்கு குசல் ஜனித் பெரேரா அணித் தலைவராக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# இராணுவ உடையில் படையினருடன் மோடி தீபாவளிக் கொண்டாட்டம்!

ஜம்மு, ஒக்.20

இந்தியாவின் ஜம்மு – காஷ்மீரின் எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவ வீரர்களுடன் பிரதமர் மோடி தீபாவளி கொண்டாடினார்.

பிரதமர் மோடியுடன் இந்தத் தீபாவளிக் கொண்டாட்டத்தில் தலைமை இராணுவ அதிகாரி பிபின் ராவத், மூத்த இராணுவ அதிகாரிகளும் பலரும் உடனிருந்தனர். இந்தக் கொண்டாட்டத்தின்போது பிரதமர் இராணுவ





உடை அணிந்து இராணுவ வீரர்களுக்கு இனிப்பு வழங்கினார். இராணுவ வீரர்களுடனான தீபாவளிக் கொண்டாட்டத்தில் பிரதமர் மோடி பேசும்போது, இராணுவ வீரர்களை எனது குடும்பமாக நினைத்து தீபாவளியைக் கொண்டாடுகிறேன். இராணுவ வீரர்களுடன் தீபாவளி கொண்டாடியது எனக்குப் பெருமையாக உள்ளது. எமது படைவீரர்கள் தாய்நாட்டை மிகுந்த செல்வாக்குடன் பாதுகாத்து வருகின்றனர் என்றார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு காஷ்மீரில் வெள்ளம் ஏற்படுத்திய பேரழிவை அடுத்து அம் மாநில மக்களுடன் மோடி தீபாவளி கொண்டாடியது குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்செலவுகளுக்கு வருகின்றது கடிவாளம்

கொழும்பு, ஒக்.20

தேர்தல்களின் போது, கட்சிகளும் வேட்பாளர்களும் மேற்கொள்ளும் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, அடுத்த தேர்தல்களில், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கானவாய்ப்புஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது காணப்படும் சட்டத்தின்படி, கட்சிகளாலோ அல்லது தனிநபர்களாலோ, தேர்தல்களின் போது செலவு செய்யப்படும் பணம் தொடர்பாகக் கட்டுப்பாடு கிடையாது. இதன் காரணமாக, அதிக பணத்தைச் செலவழித்து, தேர்தல்களில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய வாய்ப்புக் காணப்படுகிறது என்று தொடர்ச்சியாகக் கூறப்பட்டு வந்தது. அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் ஆகியோருடன் நடத்தப்பட்ட பேச்சுகளைத் தொடர்ந்து, இதற்கான கருத்தொற்றுமை ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்கெனவேஉள்ளசட்டத்தைத்திருத்தவும், கட்டுப்பாடில்லாத பணச் செலவழிப்பைக் கட்டுப்படுத்துவதற்கான திருத்தத்தை மேற்கொள்ளவும் சமர்ப்பித்த முன்மொழிவுக்கேஅமைச்சரவைஅங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# நிமலராஜன் நினைவு நாள் நேற்று யாழில் அனுஷ்டிப்பு

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்டஊடகவியலாளர்மயில்வாகனம்நிமலராஜனின்17ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு அருகிலுள்ள ஊடகவியலாளர் பொது நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிமலராஜனின் படத்துக்கு மலர் மாலையிட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டது.இந்த நிகழ்வில்அரசியல்பிரமுகர்கள்,ஊடகவியலாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## கோட்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வீடு சென்றார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில்அவர் நாடு திரும்பும் சமயம் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்படுவார் என்றே தீவிரமாக கதை அடிபட்டது. ஆனால் அவர்கைது செய்யப்படவில்லை.

தமது தந்தையார் டி.ஏ.ராஜபக்ஷ நினைவாக மெதமுலனவில் அருங்காட்சியகம் ஒன்றும் நினைவிடம் ஒன்றும் அமைப்பதற்கு அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (உ)

## வழிகாட்டல் வகுப்புகள்

முகாமைத்துவ உதவியாளர் சேவையின் விசேட தரத்துக்கு தரமுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புகள்நாளை சனிக்கிழமைமு.ப. 9.30 மணிக்கு யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

## ரயில் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு!

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள், மேலாளர்கள், நிலையப் பொறுப்பதிகாரிகளின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் தீர்வொன்றைபெற்றுக்கொள்வதற்கு தேசியசம்பளஆணைக்குழுஎந்த நடவடிக்கையையும்மேற்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரயில்வே ஊழியர்கள் இன்று நள்ளிரவு முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தபோராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

## சிவாஜிலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவாஜிலிங்கம்தலைமையில் நேற்று ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்ற குழுவில் ரெலோவின் முன்னாள்எம்.பியும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), அக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் கணேஷ்வரன் வேலாயுதம், முன்னாள் பிரதேச சபை உபதலைவர் கே.சதீஸ் ஆகிய நால்வரும், கைதிகள் இருவரின் தாய்மார்கள், இரண்டுகோதரங்கள், ஒருவரின் மனைவி என ஐவருமாக மொத்தம் ஒன்பது பேர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கைதிகள் பற்றிய விடயங்களை சிவாஜிலிங்கம் சிங்களத்தில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தார்.

தண்டனை விதிக்கப்பட்ட, வழக்கு விசாரணையை எதிர்கொள்கின்ற, இன்னமும் குற்றப்பத்திரம் கூடத் தாக்கல் செய்யப்படாத மூன்று நிலைகளில் மொத்தம்–ஆக130க்கும்குறைவானோரே உள்ளனர்.

ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவினால் 12 ஆயிரம் போராளிகளைஅரசியல்தீர்மானம்எடுத்து விடுவிக்கமுடியும்என்றால்,இந்த 130 பேர் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனஓர்அரசியல் தீர்மானம் எடுத்து முடிவை அறிவிப்பது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியம் அல்ல என்றுசிவாஜிலிங்கம்கூறினார்.

சாட்சிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று கூறி இந்த வழக்குகளை வவுனியா மேல் நீதிமன்றத்தில் இருந்து அநுராதபுரம் நீதிமன்றுக்கு இடம்மாற்றுவது கேலிக்கூத்தானது என்றார் அவர்.

அந்த வழக்கில் மொத்தம் 67 சாட்சிகள் . அதில் 64 பேர் பாதுகாப்பு அதிகாரிகள். மூவர் முன்னாள் போராளிகள்.

அவர்களுக்குத்தான் பாதுகாப்பு இல்லை என்று காரணம் காட்டுகின்றது அரசு. இப்படி அரசு கூறுவது கேவலமானது. வெட்கக்கேடானது. வடக்கில் மூன்று பேருக்கு–சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க முடியாத கையாலாகத் தனத்தில்தான் இந்த அரசு உள்ளது என்பதை கோமாளித்தனமான நிலைமையாகும்.

நாட்டின் ஜனாதிபதியே வாகனத்தை விட்டு இறங்கி, தனக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும் கூட்டத்துக்குள் புகுந்து உரையாடக்கூடிய நிலைமைக்கு இங்கு பாதுகாப்பு மேம்பட்டுள்ளது. முன்னாள்ஜனாதிபதிசந்திரிகா சாதாரணமாக யாழ். வந்து போகின்றார். அமைச்சர்கள் , பிரமுகர்கள்வந்துபோகின்றனர். அத்தகைய நிலையில்பாதுகாப்பைக் காரணம் காட்டி வழக்கை அரசு இடம் மாற்றுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

– இப்படி சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

இந்தக்கோரிக்கைகள்தொடர்பில்ஜனாதிபதியினதும்அரசினதும்திட்டவட்டமானபதில்அடுத்த வாரத்தில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.பல்கலைக்கழகமாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர்.

சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்த வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே,சட்டம்ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கா, மீள்குடியேற்றஅமைச்சர்டி.எம். சுவாமிநாதன், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன, சட்டமாஅதிபர்திணைக்களஅதிகாரிகள் எனப் பலர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அரசியல்கைதிகள்விவகாரம் தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவித்த கருத்துகளை செவிமடுத்த ஜனாதிபதி, அந்த விடயங்கள் குறித்துத் தாம் சாதகமாகப் பரிசீலிப்பார் எனப் பதிலளித்தார் எனக் கூறப்பட்டது.

இந்த விவகாரங்களுடன் நேரடியாகசம்பந்தப்பட்டசட்டமா அதிபரும் நீதியமைச்சரும் வெளிநாட்டில் இருப்பதால், அவர்கள் இரண்டொரு நாளில் நாடு திரும்பியதும் அவர்களுடனும், ஏனைய அதிகாரிகளுடனும் பேசித் தீர்க்கமான ஒரு முடிவைத் தாம் எடுப்பார் என ஜனாதிபதி தெரிவித்தார் என்று அறிய வந்தது.

ஜனாதிபதியின் தீர்மானம் அடுத்த வாரமளவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அநுராதபுரத்தில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள மூன்று அரசியல்கைதிகளில்ஒருவரின் சகோதரியும் யாழ். பல்கலைக்கழக மாணவி. அவரும் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நாடாளுமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோறளைஆகியோர்வெளிநாடு சென்றிருக்கின்றமையால், அவர்களின் நேரடிப் பங்களிப்பு இல்லாமல் இவ்விடயத்தில் ஒரு தீர்மானமும் எடுக்க முடியாது எனச்சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்தே கூட்டம் ஒத்திவைக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மேற்படி உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள கைதிகள் விடயத்தை முன்னிறுத்தி நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளையில்ஒருபிரேரணையை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்மொழிந்து உரையாற்றியிருந்தார்.

அப்போது அதற்குப் பதிலளித்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் மற்றும்பிரதிநீதிஅமைச்சர்ஆகியோர் இவ்விடயம் தொடர்பில் வியாழனன்று (நேற்று) பகல் நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியில் உயர் மட்டக் கூட்டம் ஒன்றைக் கூட்டி முடிவெடுக்கப்படும் என்று அறிவித்திருந்தனர்.

அந்தக் கூட்டமே நேற்றுப் பகல் நடைபெறாமல் அடுத்த வாரத்துக்குத்தள்ளிப்போடப்பட்டிருக்கின்றது. (உ)

## சட்ட வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினால் வழங்கப்பட்ட தேடுதல் ஆணைக்குஅமைவாக, ஆனந்த சமரசேகர கைது செய்ய முடியும் என்றுகுற்றப்புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் ஆனந்த சமரசேகர கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்றுசரணடைந்தார். அதனையடுத்து அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ரணில் விக்ரமசிங்க, தாம் மல்வத்தை பீடாதிபதியுடன் தொடர்பு கொண்டு பேசிய போது அவர் நாட்டிலேயே இல்லை என்பது தெரியவந்ததாகவும் கூறினார்.

"அஸ்கிரிய பீடாதிபதியும் மேற்படி கூட்டத்தில் பங்கேற்கவேயில்லை." – என்றார் பிரதமர் விக்கிரமசிங்க.

ஆனால் மல்வத்தை – அஸ்கிரிய பீடங்களின் கூட்டுக் குழுவின் கூட்டத்தின் முடிவிலேயே மேற்படிபுதியஅரசமைப்புமுயற்சி வேண்டாம் எனக் கோரும் அறிக்கை வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அந்தக் கூட்டம் குறித்து ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளன என்கிறார் பிரதமர் விக்கிரமசிங்க.

மக்களினால் கொடுக்கப்பட்ட ஆணையைநிறைவேற்றவேண்டாம் என்று ஊடகங்கள் கோருகின்றனவாஎன்றும்அவர்தம்மை நேற்றுக் கொழும்பில் சந்தித்த ஊடகவியலாளர்களிடம் கேள்வி எழுப்பினார். (உ)

# உசுப்பேற்றி, உணர்ச்சியூட்டி வாக்குத் திரட்டிய சுயலாப அரசியல்வாதிகளால்தான் பின்னடைவு

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் கூறுகின்றார்



விளையாட்டின் மூலமே சமூகத்தின் ஒற்றுமையை பலப்படுத்த முடியும். இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள்தொடரப்படவேண்டியமை காலத்தின் கட்டாயம் என்றும் ஈழமக்கள்ஜனநாயககட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் வருடாந்த விளையாட்டு நிகழ்வு ஆகியவற்றில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

விளையாட்டின் மூலம் சமூகத்தில் பெரிய முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் வலுப் படுத்தமுடியும். அது மட்டுமன்றி இளைஞர், யுவதிகளை ஒன்றிணைத்து புரிந்துணர்வையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தமுடியும் என்று நான் நம்புகின்றேன்.

நீண்டகாலமாக நக்கீரன் சனசமூக நிலையத்தோடும் விளையாட்டுக் கழகத்தோடும் நெருங்கிய தொடர்பு எனக்கு இருக்கின்றது. நக்கீரன் சன சமூக நிலையம் கடந்த 69 ஆண்டுகளாக பல்வேறுபட்ட சமூகப்பணிகளினூடாக சமூக விழுமியங்களை பாதுகாத்து பலப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டுவருகின்றது.

குறிப்பாக நக்கீரன் விளை யாட்டுக் கழகம் வருடம்தோறும் தீபாவளித் தினத்தன்று சமூக மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அதனூடாக சமூகத்தில் ஒற்றுமையை வலுப் படுத்திப் பாதுகாத்து தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.

அந்தவகையில் சன சமூக நிலையத்திற்கும் விளையாட்டுக் கழகத்திற்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்குவருகைதந்திருக்கும் போது இங்குள்ள வீதிகள் பல மிக நீண்ட காலமாக புனரமைப்புச்செய்யப்படாமல்இருக்கின்றஅதேவேளை இங்குள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு உள்ளிட்ட தேவைப்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

கடந்தகாலங்களில்கிடைக்கப்பெற்ற அரிய பல வாய்ப்புக்களை கடந்தகால தவறான தமிழ் அரசியல் தலைமைகள் உரிய முறைப்படி முன்னெடுக்காமையால் மக்களுக்கான தேவைகள் பல உரியமுறையில் இதுவரையில் பூர்த்தி செய்யப்படாத நிலைமையே காணப்படுகின்றது.

இதன் காரணமாக தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயேபின்தள்ளப்பட்டுள்ள நிலையில் பல்வேறு வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். மக்களை உசுப் பேற்றி உணர்ச்சியூட்டி, வாக்குகளை அபகரிக்கும் சுயலாப தமிழ் அரசியல் வாதிகளேமக்களதுவாழ்வியல் பின்னடைவுகளுக்கு காரண கர்த்தாக்களாக உள்ளனர்.

இருந்தபோதிலும் குறைந்த அரசியல் பலத்தோடு இருக் கும் நாம் கிடைத்த வாய்ப்புக் களினூடாக மக்கள் நலன் சார்ந்த செயற்றிட்டங்களை யும் பல்வேறுபட்டஅபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்த சாதித்துக் காட்டியுள்ளோம்.

ஆனால், மக்களின் வாக்குகளை அபகரித்து மாகாண சபையையும் நாடாளுமன்றக் கதிரைகளையும் அபகரித்துக் கொண்டவர்களால் எமது மக்கள் தொடர்ச்சியாகவே ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

கடந்தகால படிப்பினைகளை தமது அனுபவங்களாக கொண்டு எதிர்காலத்தில் சரியான அரசியல் தலைமைகளைத்தெரிவுசெய்யவேண்டும். இதனூடாகவே விளையாட்டுத் துறை மட்டுமல்லாது கல்வித் துறை உள்ளிட்ட துறைகளில் பல்வேறுசாதனைகளைநிலைநாட்டிமேம்பாட்டைக்காணமுடியும்.– என்றும் தெரிவித்தார்.

முன்பதாகஅல்வாய்வடக்கு குச்சம்ஞானவைரவர்கோவில் முன்றிலிலிருந்துபாண்ட்வாத்திய இசை அணி வகுப்புடன் பிரதம அதிதி உள் ளிட்ட அதிதிகள்நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து மைதானத்தில் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெற்றன.

அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் வளர்ச்சிக்காக ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சிநிதிப்பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இதன்போதுஈழமக்கள்ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் சிவகுருபாலகிருஷ்ணன், கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர்ஐயாத்துரைஸ்ரீரங்கேஸ்வரன்உள்ளிட்டகட்சியின் முக்கியஸ்தர்களும் அழைக்கப்பட்டிருந்த சிறப்பு அதிதிகள் பலரும் பங்குபற்றினர். (உ)

# பங்களாதேஷ் பாதுகாப்பு ஆலோசகருடன் பாதுகாப்புச் செயலாளர் கபில சந்திப்பு!



இலங்கைக்கான பங்களா தேஷ் தூதுவராலய பாதுகாப்பு ஆலோசகர் கொமோடோர் சயித் மக்சுமுல் ஹகீம் பாது காப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவை சந்தித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், பங்களாதேஷ் தூதுவராலய பாதுகாப்பு ஆலோசகர்மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோருக் கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இச்சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் பிரதி இராணுவ இணைப்பாளர் பிரிகேடியர் நெவில் வீரசிங்க கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


# பொலிகண்டியில் கந்தசஷ்டி மஹோற்சவம்

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவ சுவாமி ஆலய கந்தசஷ்டி மஹோற்சவம்இன்றுவெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து திருவிழா இடம்பெற்று ஆறாம் நாளான எதிர்வரும் புதன்கிழமை மாலை 7 மணிக்கு சூர சங்காரமும் மறு நாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (க)

# 2020 இல் தொற்றாநோயை கட்டுப்படுத்த நடவடிக்கை!

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 20

இலங்கையில் 2020 ஆம் ஆண்டளவில் தொற்றாநோயை மூன்றில் ஒரு பகுதியை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனம் ஜேர்மன் பேர்லினில் நடத்திய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாநாடு கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெற்றது.

புகையிலை பாவனையை கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, புகையிலை மூலமாக நாட்டிற்கு கிடைக்கும் வருமானத்தை கருத்திற்கொள்ளாமல் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டார் என்றும் அமைச்சர் ராஜித சுட்டிக் காட்டியுள்ளார்.

உயிர்களை பாதுகாப்பதே முக்கிய நோக்கம். இதற்காக புகையிலைக்கான வரியை 90 சதவீதத்தினால் அதிகரிக்க முடிந்தது.

தொற்றாநோய்களின் காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரில் 60 சதவீதமானோர் உயிரிழக்கின்றனர் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

காலைக்கதிர் Kalaikkathir



## காணாமல் போனோர் விவரம்

# தொடரும் அவலம்...!






- கே.வாசு -

தமிழ் தேசிய இனத்தின் பெரும்பான்மை வாக்குப் பலத்தின் மூலம் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் உளரீதியாக செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுடன் மைத்திரி – ரணில் கூட்டரசாங்கம் உருவாகியது. இது தமிழ் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்தது. போர் முடிந்த நிலையிலும், கடந்த மஹிந்த அரசாங்கம் வெற்றி வாதத்தில் மிதந்ததுடன் தமிழ் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்குவதிலேயே கவனம் செலுத்தியது. இதன் விளைவாகவே அவர் வீட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை உருவாகியிருந்தது. ஆனால் தமிழ் மக்கள் எதிர்பார்ப்புடன் உருவாக்கிய தற்போதைய நல்லாட்சி எனக் கூறப்படும் இந்த அரசாங்கம் கூட மக்களது மனநிலைகளைப் புரிந்து கொள்ளாத நிலையே தொடர் கிறது.

நல்லாட்சி எனபடும் இந்த அரசாங்கம் மீதும் அதிருப்தி அடைந்த தமிழ் மக்கள் தமது உரிமைக்காகவும், நீதிக்காகவும் தாமாகவே வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கிவிட்டனர். அந்த மக்களை வழிநடத்தி அவர்களது கோரிக்கைகளுக்கு வலுச்சேர்த்து அதனை அடைவதற்கு காத்திரமாகப் பங்காற்ற வேண்டிய கூட்டமைப்புத் தலைமை கூட இந்த விடயத்தில் காத்திரமாகச் செயற்படவில்லை. இதனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் கிடைத்திருக்கின்ற ஜனநாயக இடைவெளியைப் பயன்படுத்தி தன்னிச்சையான மக்கள் போராட்டங்கள் உருவாகியிருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நடந்தது என்ன...?, அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு என வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டங்கள் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மருதங்கேணி என இன்று 8 மாதங்களைக் கடந்த நிலையிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. வீயோரத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் இரவு – பகல், மழை – வெயில் எனப்பாராது கடந்த எட்டு மாதங்களாக அந்தக் கொட்ட கைகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாகன இரைச்சல்கள், வீட்டில் உள்ள ஏனைய உறவுகளைப் பிரிந்து போராட்ட களத்தில் இருக்கின்றமை, நீதி கிடைக்குமா என்ற ஏக்கம், அரசியல்வாதிகளின் போலி வாக்குறுதிகள், காலநிலைத் தாக்கம், சூழல் பாதிப் புக்கள் என்பவற்றால் நாளாந்தம் அந்த மக்கள் உடல், உளரீதியாக பாதிப்படைந்து, மிகவும் துன்பத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த 6 மாதங்களில் இத்தகைய போராட்டக் களத்தில் இருந்த 5 பேர் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே மரணமடைந்த சம்பவம் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மத்தியில் துன்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கொழும்பில் கடந்த 2007ஆம் ஆண்டு வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ரொஷான் லியோன் (மகன்) மற்றும் அமலன் லியோன் (கணவர்) ஆகியோரைத் தொடர்ந்து தேடிவந்த ஜெசிந்தா பீரீஸ் என்பவர் ஞாயிற்றுக்கிழமை மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். ஜெசிந்தா பீரிஸ் என்பவர் தனது கணவனும், மகனும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட நிலையில், நீதி கோரி பல வருடங்களாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். கொழும்பில் கடற்படையின் இரகசிய முகாமில் கண்டெடுக்கப்பட்ட 12 அடையாள அட்டைகள் தொடர்பான வழக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றது. வழக்கு விசாரணை களிலும் கடந்த வாரம் திங்கட்கிழமை ஜெசிந்தா பீரிஸ் பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் முள்ளிவாய்க்காலில் இராணுவத்திடம் சரணடைந்து காணாமல்போன தனது மகனைத் தேடிவந்த முன்னாள் போராளி வீமனின் தாயார் ஈஸ்வரன் ருத்ராதேவி மாரடைப்பு காரணமாக கடந்த 31ஆம் திகதி உயிரிழந்தார். இதுபோல், தனது கணவர் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் போராட்டத்தை ஆரம்பித்த துரைசிங்கம் ஈஸ்வரி, காணாமல் ஆக்கப்பட்ட தனது பிள்ளையைத் தேடிவந்த மகேந்திரராஜா, தனது பிள்ளையைத் தேடி போராட்டத்தை ஆரம்பித்திருந்த கீர்த்தனா உள்ளிட்ட ஐவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது? அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா அல்லது இல்லையா? என்பதை அறியாமலேயே அவர்களின் உயிர்கள் பிரிந்துள்ளமை பெருந்துயரமான சம்பவமாகும். காணாமல் ஆக்கப்பட்ட இவர்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவித்திருந்தால்கூட அவர்களின் ஆத்மா சாந்தி யடைந்திருக்கக்கூடும் என்று மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப் போராட்டக் களத்தில் உள்ள தாய்மாரில் அதிகமானவர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களது உடல் தொடர்போராட்டத்தால் இன்னும் மோசமடைந்து வருகின்றது. இதனால் இத்தகைய போராட்டங்களை முடித்து வைக்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை. இத்தகைய போராட்டக்களத்தில் உள்ள மக்களுக்கு ஆதரவாக புலம் பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களும் அந்தந்த நாட்டு அரசாங்கம் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்பட முன்வர வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட் டோருக்கு நீதி கோரி பிரித்தானியாவில் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. யுத்தம் இடம்பெற்ற போதும், யுத்தம் முடிவடைந்த கையுடனும், பலர் காணாமல் போயிருந்தனர். பலர் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட நிலையில் இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது அவர்களது உறவுகள் தினம் தினம் செத்துக் கொண்டிருக் கின்றார்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன என நீதி கோரி ஈழத்தில் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் அரையாண்டைக் கடந்துள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டும் எனவும், போர் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் காணாமல் போனோர் பற்றிய ஆரோக்கியமான நம்பகத்தன்மையுடைய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, இது குறித்து பிரித்தானியா இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி அந்தப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

அதன் தொடர்ச்சியாக பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், சிறுபான்மை சமூகத்திற்காக குரல் கொடுக்கும் சில நாடுகளின் இராஜதந்திரிகளையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் ஈழ உணர்வாளர்கள் சந்தித்தும் இருந்தனர். காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்திற்காக மட்டும் போராட்டங்களை முன்னெடுக்காது இத்தகைய போராட்டங்கள் தொடர்வதன் மூலமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நீதி கோரி போராடும் நிலையில் அந்த நீதி கிடைக்காமலேயே இறந்து கொண்டிருக்கின்றார்கள். இன்னும் பலர் தினமும் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இதனை அரசாங்கம் கண்டுகொண்டதாக தெரியவில்லை. வாக்குறுதிகளும், கால இழுத்தடிப்புக்களும் மட்டுமே வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட அந்த மக்களது வாக்குகளைப் பெற்ற தலைமைகளும் காத்திரமாக செயற்படவில்லை. இதனால் போராட்டக் களத்தில் உள்ள அந்த மக்களின் நிலை மோசமடைந்து செல்கின்றது.

இந்த மக்களது போராட்டத்திற்கு நீதி கிடைக்க மக்கள் மயப்படுத்தப்பட்ட வெகுஜனப் போராட்டங்களை கட்டமைக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. அதன் மூலமே இறந்து கொண்டிருக்கும் அந்த தாய்மாரின் ஆத்மாக்களுக்கு குறைந்தபட்சம் ஆறுதலையாவது வழங்க முடியும்.

## வித்தியா கொலை வழக்கு:

# மேன்முறையீட்டு முடிவுவர 5 வருடங்கள் செல்லுமாம்!

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் சார்பாக, உயர் நீதிமன்றில் முன்வைக்கப்படும் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் நிறைவு பெறக் குறைந்தது 5 ஆண்டுகள் வரைச் செல்லலாம் என குற்றவாளிகள் தரப்பு சட்டத்தரணி மஹிந்த ஜெயவர்த்தன தெரிவித்தார்.

ஐந்து குற்றவாளிகள் சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனுவைச் சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், “வித்தியா படுகொலை வழக்கின் மூலப் பிரதிகள் (ஊர் காவற்றுறை நீதிவான் மன்ற வழக்குப் பதிவேடு மற்றும் தீர்ப்பாயத்தின் பதிவேடு) சிங்கள மொழிக்கு மாற்றப்பட வேண்டும். அவை சுமார் 4 ஆயிரம் பக்கங்களைக் கொண்டவை. அதற்காக குறைந்தது ஓராண்டு செல்லும். பிரதம நீதியரசர் 5 நீதியரசர்கள் அடங்கிய தீர்ப்பாய குழாமை நியமிக்க வேண்டும். அந்தக் குழாம் வழக்கை முழுமையாகப் படிக்க வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு விடயத்திலும் உள்ள தவறுகளை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

“இவ்வாறான நிலையில் வித்தியா கொலை தொடர்பான இறுதி தீர்ப்பு ஐந்து வருடங்களின் பின்னரே கிடைக்கும்” – என சட்டத்தரணி மஹிந்த ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார். (உ)

## பட்டாசு வெடித்த விவகாரம் வாள்வெட்டில் போய் முடிந்தது

யாழ்ப்பாணம், ஒக்.20

தீபாவளி தினமான நேற்றுமுன்தினம் பட்டாசு கொளுத்தியதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது. பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சுப்பர்மடம் பகுதியில் இளைஞர்கள் சிலர் பட்டாசு கொளுத்தி விளையாடினர். அங்கிருந்த வீடு ஒன்றினுள்ளும் வெடிகள் வீழ்ந்துள்ளன.

வீட்டுக்குள் ஏன் வெடி கொளுத்திப் போட்டீர்கள் என்று இளைஞர்களிடம் வீட்டு உரிமையாளர் கேட்டுள்ளார். இது வாய்த்தர்க்கமாக மாறியது. திடீரென வீட்டு உரிமையாளரையும் அவர்களது உறவினர்களையும் இளைஞன் ஒருவன் வாளால் வெட்டியுள்ளான். மூவர் இதில் காயமடைந்தனர். மூவரும் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

‘‘வாளால் வெட்டிய இளைஞன் உள்ளிட்ட–தர்க்கத்தில் ஈடுபட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படும் மூன்று இளைஞர்களையும் தேடி வருகின்றோம்’’ என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிய அரசமைப்பினால் பிரிவினை; நேற்று கொழும்பில் நூல் வெளியீடு



புதிய அரசமைப்பு எனும் போர்வையில் நாட்டைப் பிரிக்கும் முறைமை தொடர்பில் தெளிவுபடுத்தும் நூல் வெளியீட்டு நிகழ்வு சியம் மகா பீடத்தின் அஸ்கிரிய மகா விகாரை பிரிவின் பிரதான பதிவாளர் கலாநிதி வண. மெதகம தம்மானந்த தேரரின் தலைமையில் நேற்றுக் கொழும்பு நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மக்கள் அரச சபையின் சபைத் தலைவர் பேராசிரியர் வண. இதுராகாரே தம்மரத்ன தேரரின் கையினால் மெதகம தேரருக்கு நூல் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தேசிய அமைப்புக்களின் ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வண. பொங்கமுவே நாலக்க தேரர் உட்பட பலர் கலந்துகொண்டுள்ளனர்.

## மீனவர்களான தந்தை — மகன் நாகர்கோவில் கடலில் மாயம்

வடமராட்சிகிழக்கு, நாகர்கோவில் கடற்பரப்பிலிருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் காணாமல் போயுள்ளனர் எனப் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். காணாமல் போனவர்கள், ஒரே படகில் சென்ற தந்தையும் மகனும் எனத் தெரிவிக் கப்பட்டுளளது.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில் வசிக்கும் பரமானந்தராசா அருள்ராஜ் (வயது 38) மற்றும் சிங்காரவேலு பரமானந்தராசா (வயது 59) ஆகியோரே காணாமல் போயுள்ளனர் என பொலிஸார் கூறினர். கடந்த செவ்வாயன்று அதிகாலை இரண்டு மணிக்கு, டிங்கிப் படகில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் இதுவரைகரை திரும்பவில்லை. சம்பவம் தொடர்பில் கடற்படையினரின் உதவியை பருத்தித்துறை பொலிஸார் நாடியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.